
# கோபுரம்

தகவல் இதழ்
மார்கழி – 1997



இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீடு

# இந்து சமய ஆய்வரங்கு




திணைக்களம் ஒழுங்கு செய்து நடாத்திய இந்துசமய ஆய்வரங்கிற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட புத்த சாசன அமைச்சரும், கலாசார சமய அலுவல்கள் அமைச்சருமான, மாண்புமிகு லக்ஷ்மன் ஜயக்கொடி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவர் பேராசிரியர் . சி . பத்மநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவதைப் படத்திற் காணலாம். ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா, சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், திருமதி . இ . கைலாசநாதன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.




அட்டைப்படம் -:

இந்தியா,கர்நாடக மாநிலம்,ஹம்பியில் அமைந்துள்ள விருபாக்ஷ ஆலயத் தோற்றம்

உ

# கோபுரம்

இந்துசமய,கலாசார
அலுவல்கள் திணைக்கள
வெளியீடு

மலர் 8 இதழ் 4

※ 1997 ※

ஈசுவர வருடம் - மார்கழி மாதம்

## உள்ளே.........

※ திணைக்களச் செய்திகள்

※ பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும்

※ சிறிய ஆலயங்களுக்கான பூஜை நடைமுறை விதிகள்

※ நமது உடல் ஓர் ஆலயம்!

※ நெற்றிச் சின்னங்கள்

※ பிரார்த்தனை

※ நடராஜத் திருவடிவம்

※ வாழ்ந்து பார்க்கலாம் வாருங்கள்!

※ நெஞ்சுக்கு நிம்மதி!

※ ஞானமும் ஆனந்தமும்!

※ தர்ம சாஸ்தாவான ஐயப்பன்!

※ எது பக்தி?

---

கோபுரம் இதழ் பற்றிய உங்கள் எண்ணங்களை கீழ்வரும் முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.

பணிப்பாளர்.

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,

98,வோட் பிளேஸ்.

கொழும்பு - 07.

# திணைக்களச் செய்திகள்

## இந்து சமய ஆய்வரங்கு 1997

திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய இந்து சமய ஆய்வரங்கு அக்டோபர் மாதம் 12, 13ᵗʰ திகதிகளில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

ஆய்வரங்கின் கருப்பொருள் **"தமிழகத்திலும் இலங்கையிலும் பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை ஏற்பட்ட இந்து சமய வளர்ச்சி"** என்பதாகும். ஆய்வரங்கிற்கென தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அ.பாண்டுரங்கன் (புதுவைப் பல்கலைக்கழகம், தமிழ்த்துறை) கலாநிதி என்.என்.கந்தசாமி (தமிழ்த்துறைத் தலைவர் – தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்) பேராசிரியர் புலவர் செ.இராசு (கல்வெட்டியத்துறை தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்) ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொடக்க நாள் நிகழ்ச்சிகள், கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளரும், திணைக்களப் பதில் பணிப்பாளருமான திருமதி - இராசலட்சுமி கைலாசநாதன் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகின.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்களின் வேதபாராயணம் இடம்பெற்றது. தொடர்ந்து பண்ணிசைப் பாவலர் பி.வி. இராமன் அவர்கள் திருமுறை இசைத்தார்.

திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களின் வரவேற்புரையைத் தொடர்ந்து கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களின் அருளுரை இடம்பெற்றது. அடுத்து திருமதி. கைலாசநாதன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். தொடர்ந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதித் தலைவரும், பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான, திரு .சி. பத்மநாதன் அவர்கள் ஆய்வரங்கின் தொனிப் பொருள் குறித்து தொடக்கவுரை நிகழ்த்தினார்.

அடுத்ததாக அன்றைய வைபவத்திற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கலாசார சமய அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு லக்ஷ்மன் ஜயக்கொடி அவர்களின் உரை இடம்பெற்றது.

திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு . எஸ் . தெய்வநாயகம் அவர்களின் நன்றியுரையுடன் தொடக்க வைபவ நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

இரண்டு தினங்களும் ஒன்பது அமர்வுகளில் ஆய்வுரைகள் இடம்பெற்றன.

ஆய்வுகளுக்கு முறையே,பேராசிரியர் சி. பத்மநாதன்,பேராசிரியர் புலவர் செ. இராசு, பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், பேராசிரியர் அ. பாண்டுரங்கன், பேராசிரியர் வி.சிவசாமி, கலாநிதி. என்.என். கந்தசாமி, ஆகியோர் தலைமை

பேராசிரியர் .இ. பத்மநாதன் அவர்களின் நெறிப்படுத்தலில், திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு . எஸ். தெய்வநாயகம் அவர்கள், ஆய்வரங்கிற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் , உதவிப் பணிப்பாளர்கள் திரு வீ. விக்கிரமராஜா, திரு . எஸ். குமார் வடிவேல், கலாசார உத்தியோகத்தர்கள், ஏனைய அலுவலர்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பு நல்கினர்.

இரண்டாம் நாள் மாலை அமர்வுகளின் நிறைவாக கருத்துரைகள் இடம்பெற்றன. பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு .வி. மகேஸ்வரன் அவர்களும் ,கலாநிதி என்.என். கந்தசாமி அவர்களும் ஆய்வரங்கு தொடர்பாக கருத்துரைகள் வழங்கினர்.பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள், அனைத்து அமர்வுகளையும் பற்றிய தொகுப்புரை வழங்கினார்.

திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு . குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் ஆய்வரங்கு நிகழ்வுகள் நிறைவுபெற்றன. பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் நிகழ்வுகளை நெறிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

❊❊❊❊❊❊❊

# இந்து சமய ஆய்வரங்கு

## அமர்வுகளில் தலைமை வகித்தோர் விபரம்

01. **திருமதி . இராஜலெட்சுமி கைலாசநாதன்**
மேலதிக செயலாளர் (இந்து விவகாரம்),
கலாசார , சமய அலுவல்கள் அமைச்சு.

02. **பேராசிரியர் சி. பத்மநாதன்**
துணைத்தலைவர்,
இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

03. **பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன்**
தலைவர்,இந்து நாகரிகத்துறை ,
யாழ் . பல்கலைக்கழகம்.

04. **பேராசிரியர் அ. பாண்டுரங்கன்**
தமிழ்த்துறை , புதுவைப்பல்கலைக்கழகம்.

05. **பேராசிரியர் வி. சிவசாமி**
தலைவர், சமஸ்கிருதத்துறை ,
யாழ். பல்கலைக்கழகம்.

06. **கலாநிதி எஸ். என். கந்தசாமி,**
தலைவர், தமிழ்த்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,தஞ்சாவூர்.

07. **பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்,**
தலைவர் , வரலாற்றுத்துறை,
யாழ் . பல்கலைக்கழகம்.

08. **பேராசிரியர் . புலவர் . செ. இராசு,**
கல்வெட்டியல் துறை ,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

# இந்து சமய ஆய்வரங்கு



இந்துசமய ஆய்வரங்கில், கலாநிதி என்.என். கந்தசாமி, திருமதி . ஆர் . கைலாசநாதன், ஆகியோர் உரை நிகழ்த்துவதைப் படங்களிற் காணலாம். ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா, சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள், மாண்புமிகு அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி, பேராசிரியர் சி. பத்மநாதன் ஆகியோரும் படத்திற் காணப்படுகின்றனர்.



# இந்து சமய ஆய்வரங்கு




இந்துசமய ஆய்வரங்கில், பேராசிரியர் புலவர் செ. இராசு அவர்கள் உரை நிகழ்த்துகின்றார். பேராசிரியர் சி . பத்மநாதன் . பேராசிரியர் சோ . கிருஷ்ணராஜா, பேராசிரியர் அ. பாண்டுரங்கன், கலாநிதி . எஸ் . என் . கந்தசாமி ஆகியோரும் , கூட்டத்தில் ஒரு பகுதியினரும் இப்படங்களிற் காணப்படுகின்றனர்.



# இந்து சமய ஆய்வரங்கு

## – 1997 –

## அமர்வுகளில் ஆய்வுரைகள் சமர்ப்பித்தோர் விபரம்

| | தலைப்பு | பெயர் |
|---|---|---|
| 01. | ஈழத்துப் பிராமண குலங்களும் அக்கிரகாரங்களும் | பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்,<br>தலைவர் . வரலாற்றுத்துறை,யாழ். பல்கலைக்கழகம். |
| 02. | முருகவழிபாடு – தோற்றமும் வளர்ச்சியும் | பேராசிரியர் வி. சிவசாமி<br>தலைவர், சமஸ்கிருதத்துறை , யாழ். பல்கலைக்கழகம். |
| 03. | திருமுறையும் திருமந்திரமும் | கலாநிதி எஸ். என். கந்தசாமி<br>தலைவர், தமிழ்த்துறை,தமிழ்ப் பல்கலைக்கழகம்,<br>தஞ்சாவூர். |
| 04. | சைவசித்தாந்த தத்துவம் - திருமந்திரத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு | திருமதி ஏ. என். கிருஷ்ணவேணி<br>நுண்கலைத்துறை , யாழ். பல்கலைக்கழகம். |
| 05. | இந்துப் பண்பாட்டு மரபில் ஆகமங்களின் செல்வாக்கு | பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன்<br>தலைவர்,இந்து நாகரிகத்துறை ,<br>யாழ். பல்கலைக்கழகம். |
| 06. | தமிழின் முதலாவது பக்தியுகமும் சைவசித்தாந்தத்தின் பிறப்பும் | பேராசிரியர் சோ. கிருஷ்ணராஜா ,<br>தலைவர் மெய்யியல்துறை . யாழ். பல்கலைக்கழகம். |
| 07. | திருமுருகாற்றுப்படை சித்திரிக்கும் முருகன் - அறிமுகம் | திரு . மா. வேதநாதன்<br>முதுநிலை விரிவுரையாளர்<br>இந்து நாகரிகத்துறை , யாழ் பல்கலைக்கழகம். |
| 08. | உபயவேதாந்தம் - தோற்றமும் வளர்ச்சியும் | பேராசிரியர் அ. பாண்டுரங்கன்<br>தமிழ்த்துறை . புதுவைப் பல்கலைக்கழகம். |
| 09. | பழம் தமிழ் இலக்கியங்களிற் காணும் சைவத்தின் மூலக்கூறுகள் | திருமதி கலைவாணி இராமநாதன்<br>சிரேஷ்ட விரிவுரையாளர் , இந்து நாகரிகத்துறை ,<br>யாழ். பல்கலைக்கழகம். |
| 10. | நாயன்மார் பாசுரங்களில் வேதம் | திருமதி விஜயலெட்சுமி சிவச்சந்திரன்<br>விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம். |
| 11. | காரைக்கால் அம்மையார்புராணம் | திருமதி மனோன்மணி சண்முகதாஸ்<br>வருகை விரிவுரையாளர், கக்குயின் பல்கலைக்கழகம்,<br>டோக்கியோ, ஜப்பான் |
| 12. | சித்தாந்தத்தில் உவமானம் மெய்கண்ட சாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டதொரு பார்வை | திரு . க. சிவானந்த மூர்த்தி<br>சிரேஷ்ட விரிவுரையாளர், மெய்யியல்துறை<br>யாழ். பல்கலைக்கழகம். |
| 13. | பாவை மரபு | திரு . க. இரகுபரன்<br>விரிவுரையாளர் , தென் கிழக்குப் பல்கலைக்கழகம். |
| 14. | கதிர்காம முருகன் - ஒரு சமூக மானுடவியல் தரிசனம் | திரு. என்.சண்முகலிங்கன்<br>முதுநிலை விரிவுரையாளர்.யாழ். பல்கலைக்கழகம். |

# முத்தமிழ் விழா

திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய முத்தமிழ் விழா நிகழ்வுகள் அக்டோபர் மாதம் 11,12ம் திகதிகளில் வெள்ளவத்தை இராம கிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்றன.

முதல் நாள் 11ம் திகதி கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளரும் திணைக்கள பதில் பணிப்பாளருமான திருமதி.கைலாசநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு,கால்நடை அபிவிருத்தி ,தோட்ட அடித்தளவமைப்பு அமைச்சர் கௌரவ சௌ. தொண்டமான் அவர்கள் , பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

முதல் நாள் நிகழ்ச்சிகள் , மங்கள வாத்தியக் கச்சேரியுடன் ஆரம்பமாகின.திரு . கே. எம் . பஞ்சாபிகேசன், திரு என். கே. சசிதரன் ஆகியோரின் நாதஸ்வரத்திற்கு ,திரு . என். குமரகுரு , திரு . என். சுந்தரலிங்கம் ஆகியோர் , தவில் வாசித்தனர்.தொடர்ந்து திணைக்களப் பிரதிப் பணிப்பாளர், திருமதி நாவுக்கரசன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

நிகழ்ச்சிகளில் தமிழருவி , திரு . த. சிவகுமாரன் அவர்கள், "யாதுமாகி நின்றாய்" எனும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

தொடர்ந்து, திருமதி . சத்தியபாமா ராஜலிங்கம் அவர்களின் நெறியாள்கையில் செல்வன் கரிகாலன் கணேசராசா, செல்வன் சுதர்ஷன் தனராஜா, ஆகியோரின் கர்நாடக இசைக்கச்சேரி இடம்பெற்றது.

திருமதி . ராதை குமாரதாஸ், திருமதி . காயத்திரி சுந்தரமோகன், செல்வி நிரஞ்சனி ஆனந்த மகேசன் , ஆகியோரின் 'வீணாமிர்தம்' இசை நிகழ்ச்சி இடம் பெற்றது.

தொடர்ந்து திருமதி . வீலாம்பிகை செல்வராஜா அவர்களின் நெறியாள்கையில் 'சீதாபஹறணம்' எனும் நாட்டிய நாடகம் இடம் பெற்றது.

திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு . எஸ். தெய்வநாயகம் அவர்களின் நன்றியுரையுடன் அன்றைய நிகழ்ச்சிகள் நிறைவுபெற்றன.

இரண்டாம் நாள் , திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு . குமார் வடிவேல் அவர்களின் வரவேற்புரையுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. திருமதி . இராசலட்சுமி கைலாசநாதன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். மட் / விபுலானந்த இசை நடனக் கல்லூரி மாணவியரின் 'பிருந்தகானம்' நிகழ்ச்சி இடம்பெற்றது.தொடர்ந்து உடப்பூர் திரு . பெ. சோமாஸ்கந்தர் குழுவினரின் 'சத்திய சாந்நித்தியம்' எனும் வில்லிசை இடம் பெற்றது.


விபுலானந்த இசை நடனக் கல்லூரி மாணவ மாணவியர் 'காத்தவராயன்' நாட்டிய நாடகத்தை வழங்கினர். கம்பன் கழக அமைப்பாளர் திரு . இ. ஜெயராஜ் 'உள்ளத் தனையது உயர்வு' எனும் பொருளில் சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து நிருத்தனா கலாமன்றம் திருமதி சிவானந்தி ஹரிதர்சனின் மாணவியர் அளித்த 'நாட்டியாஞ்சலி' நிகழ்ச்சி இடம்பெற்றது.

திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு . எஸ். குமார் வடிவேல் அவர்களின் நன்றியுரையுடன் முத்தமிழ்விழா நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

❋❋❋❋❋❋

மகிழ்ச்சிக்கு எது அளவுகோல் என்று அளந்து பார்க்காதீர்கள் ! இருக்கிற மகிழ்ச்சியும் காணாமல் போய் விடும்.

# முத்தமிழ் விழா



முத்தமிழ் விழாவில் திரு . கே. எம் . பஞ்சாபிகேசன், திரு .என். கே . சசிதரன் ஆகியோர் நாதஸ்வரம் இசைப்பதையும், திரு . என் . குமாரகுரு தவில் வாசிப்பதையும் படத்திற் காணலாம்.



மட் / விபுலாநந்த இசை நடனக் கல்லூரி மாணவியர் வீணை இசைப்பதைப் படத்திற் காணலாம்

# முத்தமிழ் விழா



முத்தமிழ் விழாவிற்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கால்நடை அபிவிருத்தி, தோட்ட அடித்தளவமைப்பு அமைச்சர், மாண்புமிகு எஸ். தொண்டமான் அவர்கள் உரையாற்றுவதையும் கூட்டத்தினரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.



முத்தமிழ் விழாவில் தமிழருவி த. சிவகுமாரன், கம்பன் கழக அமைப்பாளர் தம்பவாரிதி இ. ஜெயராஜ் ஆகியோர் சிறப்புரைகள் நிகழ்த்துவதைப் படத்திற் காணலாம்.

# கந்தபுராணத்தில் பக்தி நெறி

திணைக்களம் ஏற்பாடு செய்த இந்து சமயச் சொற்பொழிவு நிகழ்ச்சியொன்று அக்டோபர் மாதம் 4ம் திகதி மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது

இந்நிகழ்ச்சியில் திருச்சி. கே. கல்யாணராமன் அவர்கள், "கந்தபுராணத்தில் பக்தி நெறி" என்னும் பொருளில் சிறப்புரை நிகழ்த்தினார்.

கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி . ஆர். கைலாசநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் உதவிப் பணிப்பாளர் திரு. குமார் வடிவேல் அவர்கள் அறிமுகவுரையையும் , நன்றியுரையையும் நிகழ்த்தினார்.பிரதிப் பணிப்பாளர் திருமதி . சாந்தி நாவுக்கரசன் அவர்களும் கலந்து சிறப்பித்தார்.

✣✣✣✣✣✣✣✣✣





இந்து சமயச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் திருச்சி கே. கல்யாணராமன் அவர்கள் உரை நிகழ்த்துவதையும் , திருமதி . கைலாசநாதன் , திருமதி. சாந்தி நாவுக்கரசன் , திரு . குமார் வடிவேல் ஆகியோருடன் கூட்டத்தினரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

ஒவ்வொரு மனிதனும் அறியாமை கொண்டவன் தான் – எந்தத் "துறை" யில் என்பது மட்டுமே வேறுபடுகிறது.

# இரத்தினபுரி மாவட்ட அருள் நெறி விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒழுங்கு செய்து நடாத்திய அருள் நெறி விழா 18.10.97 ஆம் திகதி இரத்தினபுரி மாவட்ட பலாங்கொடை மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு . குமார் வடிவேல் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு மட்டக்களப்பு இராம கிருஷ்ணமிஷன் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா அவர்கள் பிரதம விருந்தினராகவும், கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி . இராஜலெட்சுமி கைலாசநாதன், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி . சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீமத் அஜராத்மானந்தா சுவாமி, மேலதிக செயலாளர் திருமதி . இராஜலெட்சுமி கைலாசநாதன், பிரதிப் பணிப்பாளர் திருமதி . சாந்தி நாவுக்கரசன், உதவிப் பணிப்பாளர் திரு குமார் வடிவேல், ஆகியோரை அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பதாதைகள் ஏந்திய வண்ணம் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். இதில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள்,ஆலய அறங்காவலர்கள் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கது.ஊர்வல ஏற்பாடுகளை பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலய அதிபரும்,இளஞ்சைவப் புலவருமான திரு . நடா. ஜெயராஜன் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

மங்கள விளக்கேற்றப்பட்டு கலைமகள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பஞ்சபுராணம் ஓதலுடனும், இந்துசமய கீதத்துடனும் விழா ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து அறநெறிக்கீதம் இசைக்கப்பட்டது.பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் அவர்களின் வேதபாராயணம் இடம்பெற்றது.

வரவேற்புரையினை றை தமிழ் மகா வித்தியாலய அதிபர், திரு . நடா. ஜெயராஜன் அவர்கள் நிகழ்த்தி வைத்தார்.இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு . குமார் வடிவேல் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார்.மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா அவர்களின் அருளுரை இடம்பெற்றது. இதனைத்தொடர்ந்து கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி . ஆர். கைலாசநாதன் அவர்களதும், பிரதிப் பணிப்பாளர் திருமதி . சாந்தி நாவுக்கரசன் அவர்களதும், சிறப்பு உரைகள் இடம்பெற்றன.

பலாங்கொடை றை தமிழ் மகா வித்தியாலய அதிபரின் நெறியாள்கையில்,கலைமகள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனை இடம்பெற்றது. மண்டபத்தில் இருந்த அனைவரும் இணைந்து பாடினர். அடுத்து அறநெறிப் பாடசாலை கீழ்ப்பிரிவு மாணவர்களின் ஆன்மீக உடை, சிறுவர் பாடல், கதைசொல்வல் என்பன இடம்பெற்றன."பக்தி மார்க்கத்தில் சிறந்தது சரியையே" என்னும் தலைப்பில் ஸ்ரீ முத்துமாரியம்மன்ஆலய அறநெறிப்பாடசாலை மேற்பிரிவு மாணவர்களும்."பக்தி மார்க்கத்தில் சிறந்தது கிரியையே" என்னும்தலைப்பில்

றக்குவானை ஞானவாணி அறநெறிப் பாடசாலை மேற்பிரிவு மாணவர்களும் மிகத்திறமையாக வாதிட்டனர். அருள்மொழியரசி திருமதி . வசந்தா வைத்தியநாதன் அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வைத்தார்.

அறிவுப்புதிர்ப் போட்டியில் பலாங்கொடை கலைமகள், விவேகானந்தா, சாரதை, பாரதி, ஞானவாணி, அபிராமி, காவத்தை துர்க்கா,ஞானவாணி, றக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆகிய ஒன்பது அறநெறிப்பாடசாலைகள் கலந்து சிறப்பித்தன.இதனை திருமதி . வசந்தா வைத்தியநாதன் அவர்கள் நெறிப்படுத்தினார்.

தொடர்ந்து பலாங்கொடை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத் தலைவர் திரு . கு. சாமித்தம்பி, பின்னவலை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய காப்பாளர் திரு . எம் சிங்காரவேல், காவத்தை இந்து மகாசபை செயலாளர் திரு . எஸ் கந்தையா ஆகியோர்களது கருத்துரைகள் இடம்பெற்றன. பலாங்கொடை அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிபநடனம், சாரதை.அறநெறிப் பாடசாலை மாணவர்களின் காவடி, றக்குவானை முத்துமாரியம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் செம்புநடனம், சாரதை.அறநெறிப் பாடசாலை மாணவர்களின் குழுப்பாடல்,விவேககலாலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் குழுப்பாடல், ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இறக்குவானை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின், பஞ்சபுராணம் இசைக்கப்பட்டது.இறுதி நிகழ்ச்சியாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களகலாசார உத்தியோகத்தர் திருமதி . நிர்மலா கருணானந்தராஜா அவர்களின் நன்றியுரை இடம்பெற்றது.இத்துடன் நிகழ்ச்சிகள் யாவும் இனிது நிறைவு பெற்றன.

தொகுப்பு – திருமதி நிர்மலா கருணானந்தராஜா
(கலாசார உத்தியோகத்தர்)

# கண்டியில் சைவசித்தாந்த வகுப்புக்கள்

திணைக்களம், பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் அனுசரணையோடு ஏற்பாடு செய்து நடத்திய சைவ சித்தாந்த வகுப்புக்கள், ஆகஸ்ட் மாதம் 16ம்,17ம்,18ம் திகதிகளில் பேராதனை குறிஞ்சிக் குமரன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள், நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்ததோடு விரிவுரைகளும் நிகழ்த்தினார்.

விரிவுரைகளை கண்டி மாவட்ட இந்து சமய ஆலோசகர் திருமதி . ஞானசேகர ஐயர், சீடா நிறுவன உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு . வெள்ளைச்சாமி, சப்பிரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு க. நாகேஸ்வரன், அருள்மொழி அரசி வசந்தா வைத்தியநாதன், திரு வி . என் . தியாகராசா, செல்வி கே . எம். ராஜேஸ்வரி ஆகியோர் நிகழ்த்தினர். திரு . குபேரன்,செல்வி. எம். சாந்தசொரூபி ஆகியோர் மூன்று தினங்களும்,பண்ணிசைச் செயன்முறைப் பயிற்சி வழங்கினர்.

பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரிகள் சங்கத்தைச் சேர்ந்த திரு ஏ. இளமுருகன், இவ்வகுப்புக்கள் நடைபெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தார்.

இவ் வகுப்புக்களின் போது முப்பொருள், ஆன்ம ஈடேற்றம்,கன்மம், மறுபிறப்புக்கோட்பாடு, திருமுறைகளில் சைவ சித்தாந்தம், மெய்கண்ட சாத்திரங்களும், சந்தனாச்சாரியர்களும், போன்ற விடயங்களில் விரிவுரைகள் இடம்பெற்றன.

திணைக்களத்தின் சார்பில் கலாசார உத்தியோகத்தர் செல்வி கே. எம் இராஜேஸ்வரி நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை மாவட்ட சைவசித்தாந்த வகுப்புக்கள்

திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த திருகோணமலை மாவட்ட சைவ சித்தாந்த வகுப்புக்கள் அக்டோபர் மாதம் 18ம்,19ம் திகதிகளில் திருகோணமலை புனித சவேரியார் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

முதல் நாள் நிகழ்ச்சிகளில் இறைபணிச் செம்மல் திரு . பொ . கந்தையா அவர்கள் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து கலாசார உத்தியோகத்தர் திரு . எஸ் . மகேந்திரராஜா அவர்களின் வரவேற்புரை இடம்பெற்றது.

வடகிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் கலாசார உதவிப் பணிப்பாளர் திரு . எஸ் . எதிர்மன்ன சிங்கம் அவர்களின் தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வடகிழக்கு புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு . எஸ் . விநாயகலிங்கம் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து "மெய்கண்ட சாத்திரங்களும் , சந்தனாச்சாரியர்களும்," எனும் தலைப்பில் திரு . அ. பரசுராமன் அவர்களும் (உதவிப் பணிப்பாளர் கல்வித் திணைக்களம், ஈச்சிலம்பற்று) "சைவசித்தாந்தத்தில் பதி" எனும் தலைப்பில் திரு செ . பத்மசீலன் அவர்களும் (ஆசிரியர் திருகோணமலை , ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயம் ) "பதி, பசு, பாசம்," எனும் தலைப்பில் திரு . எஸ் . மதியழகன் அவர்களும் (ஆசிரியர் , திருமலை ஸ்ரீ கோணேஸ்வர வித்தியாலயம்) "ஆன்ம ஈடேற்றம்" எனும் பொருளில் செல்வி . ஆர் . செல்வராணி அவர்களும் ( பிரதி அதிபர், திருமலை மகளிர் கல்லூரி) விரிவுரைகள் நிகழ்த்தினர்.

மறுநாள் 19ம் திகதி "சைவசித்தாந்தம் உணர்த்தும் கன்மக்கோட்பாடு" எனும் பொருளில் திருமதி . சித்தி பத்மநாதன் அவர்களும் (ஆசிரிய ஆலோசகர்) "தேவார திருவாசகங்களில் சைவசித்தாந்த விளக்கம்" எனும் பொருளில் ஞானசிரோன்மணி பண்டிதர் இ. வடிவேல் அவர்களும் "கந்தபுராணம் கூறும் சைவசித்தாந்தம் "எனும் பொருளில் திருமதி . ப. வன்னியகுலம் அவர்களும் (திட்டமிடல் உதவிப்பணிப்பாளர்) "சமயத்தின் தோற்றமும் , சமுதாய வாழ்வும்" எனும் தலைப்பில் திரு . எஸ் . எதிர்மன்னசிங்கம் அவர்களும் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

கலந்து கொண்ட ஆசிரியர்களிடையே குழுநிலையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. கலாசார அலுவலர் திரு . எஸ் . மகேந்திரராஜா அவர்கள் தொகுப்புரை வழங்கினார். திருமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவைப் பொதுச் செயலாளர் திரு . செ . சிவபாதசுந்தரம் அவர்களின் நன்றியுரையுடன் வகுப்புக்கள் நிறைவு பெற்றன.

தொகுப்பு - எஸ் -மகேந்திரராஜா
(கலாசார உத்தியோகத்தர்)

✪✪✪✪✪✪✪

ஒரு மனிதனின் இதயத்திற்குள் நீங்கள் இடம் பிடிக்க நினைத்தால் அவன் உங்களை அர்த்தமின்றிக் காயப்படுத்தும் போதும் அமைதியுடன் இருந்தாக வேண்டும்.

# யாழ்ப்பாணத்தில் இலக்கியச் சொற்பொழிவு, இந்து சமயப் பேருரை

யாழ்ப்பாண நிலைமைகள் சீருற்ற பின்னர், திணைக்களம் முதற் தடவையாக ஏற்பாடு செய்து நடத்திய இலக்கியச்சொற்பொழிவு, இந்து சமயப் பேருரை என்பன, நவம்பர் மாதம் 8ம் திகதி காலை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றன.

யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு. து. வைத்தியலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சிக்கு திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். திருமதி. நாவுக்கரசன் தமது உரையில் திணைக்களப் பணிகள், செயற் திட்டங்கள் என்பன பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து "இலங்கையின் மரபுவழிக் கவிதைகள்" எனும் தலைப்பில் யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள், இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தினார். இதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம் பெற்றது.

அன்று பிற்பகல் "இந்து சமயமும், கவின் கலைகளும்" எனும் பொருளில் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை அவர்கள், இந்து சமயப் பேருரை நிகழ்த்தினார்.கலந்துரையாடலைத் தொடர்ந்து, மேலதிக அரச அதிபர், திரு.து.வைத்தியலிங்கம் அவர்களின் நன்றியுரையுடனும், திருமுறை ஓதலுடனும் வைபவம் இனிதே நிறைவு பெற்றது.



திருகோணமலை மாவட்ட சைவசித்தாந்த வகுப்புக்களை புனித சவேரியார் கல்லூரி அதிபர் திரு. எஸ். தங்கவேல் அவர்கள் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், திணைக்கள கலாசார உத்தியோகத்தர் திரு. எஸ். மகேந்திரராஜா உட்பட கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்திற் காணலாம்.

# யாழ் . மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு.

யாழ் . மாவட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு, நவம்பர் 9ஆம் திகதி நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ் . மேலதிக அரச அதிபர் திரு . து. வைத்தியலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு நல்லூர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து பலாலி,பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர், திரு . சிவ மகாலிங்கம் அவர்கள் "இளம் சிறார்களின் நல்வாழ்வுக்கு அறநெறிச் கருத்துக்கள்" எனும் பொருளிலும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு . கு. பத்மநாதன் அவர்கள் "சமயம் கற்பித்தலில் சில பிரச்சனைகளும் பரிமாணங்களும்" எனும் பொருளிலும் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை "கவின் கலைகளைச் கற்பித்தல் எனும் பொருளிலும், யாழ் . பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி கோபாலகிருஷ்ண ஐயர் அவர்கள், "ஆன்மீக ஈடேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பன இந்து சமய விரதங்கள்" எனும் பொருளிலும் விரிவுரைகள் நிகழ்த்தினர்.

திரு . திருஞானசம்பந்தர் அவர்களால் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு பண்ணிசைப் பயிற்சி வழங்கப்பட்டது. அறநெறிச் கல்வியின் நோக்கம், அதனைச் செயற்படுத்தல் வழிமுறைகள் எனும் தலைப்பில் நடைபெற்ற செயலமர்வில் ஆசிரியர்கள் , " முதியோரைப் பேணுதல், உயிர்களிடத்துஅன்பு செய்தல், உண்மை பேசுதல், இன்சொல் பேசுதல், பிறர்க்குதவுதல்," ஆகிய ஐந்து தலைப்புக்களில் நிகழ்ச்சிகள் நடாத்தினர்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி . சாந்தி நாவுக்கரசன் அவர்கள் அறநெறிப் பாடசாலைகளின் நோக்கம், செயற்பாடுகள், பயன்கள் தொடர்பாக விரிவான விளக்கம் அளித்தார்.

விரிவுரையாளர்கள், கலந்து கொண்ட ஆசிரியர்களின் சந்தேகங்களுக்கான தெளிவுகளை அளித்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவில் ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான நூல்கள், இசைக் கருவிகள் என்பன வழங்கப்பட்டன.

நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் திருமதி . விசாகரூபனின் நன்றியுரையுடனும், திருமுறை ஓதலுடனும் கருத்தரங்கு நிறைவு பெற்றது. இந் நிகழ்ச்சியில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும், யாழ் மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள், கிராமசேவகர்கள், உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

********

முட்டாள் மன்னிக்கவும் மாட்டான் மறக்கவும் மாட்டான், சராசரி புத்திகொண்டவன் மன்னிப்பான், மறப்பான்! அதிபுத்திசாலி மன்னிப்பான், ஆனால் மறக்க மாட்டான்.

# மட்டக்களப்பு மாவட்ட அருள்நெறி விழா

திணைக்களம் ஒழுங்கு செய்து நடாத்திய மட்டக்களப்பு மாவட்ட அருள்நெறி விழா நவம்பர் மாதம் 4ம் திகதி சனிக்கிழமை ஆனைப்பந்தி இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

திணைக்கள உதவிப் பணிப்பாளர், திரு . குமார் வடிவேல் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு மட்/ இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தாஜி மஹராஜ் அவர்கள் பிரதம அதிதியாகவும், ஸ்ரீமத் சுவாமி அஜாத்மானந்தாஜி மஹராஜ் அவர்கள் மட்/ நீதிமன்ற நீதியரசர் , திரு. கே. விஸ்வநாதன், மேலதிக அரச அதிபர் திரு . சி. சண்முகம் கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி . ஆர். கைலாசநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

அன்று காலை அறநெறி ஊர்வலம் மட்/ பொது நூல் நிலையத்திலிருந்து ஆரம்பித்து ஆனைப்பந்தி மகளிர் கல்லூரியை வந்தடைந்தது.

எல்லை வீதி இந்து மகளிர் மன்றம் ஏற்பாடு செய்திருந்த அறநெறிக் கண்காட்சியை, சுவாமி ஜீவனானந்தஜி அவர்கள் திறந்து வைத்தார்.அறநெறி நூல்கள் கண்காட்சியை ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா அவர்கள் திறந்து வைத்தார்.

சங்கீத பூஷணம் திருமதி சாந்தாவதி நாகையா அவர்களின் இறைவணக்கத்தைத் தொடர்ந்து மட்/ கலாசார உத்தியோகத்தர், செல்வி . க . தங்கேஸ்வரி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

திரு . குமார் வடிவேல் அவர்களின் தலைமையுரையை அடுத்து " மாறும் உலகின் மாறா உண்மை " எனும் தலைப்பில் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா அவர்களும், "வாழ்க்கையில் சமய தத்துவங்களைக் கடைப்பிடித்தல்" எனும் பொருளில் செட்டிப்பாளையம் ஆசிரியர் திரு . ஆர். பேரின்பராசா அவர்களும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். தொடர்ந்து பிரதம விருந்தினர் சிறப்பு விருந்தினர்களின் சிறப்புரைகள் இடம் பெற்றன.

பிற்பகல் " வாழ்க்கை மேம்பாட்டுக்கு அறநெறிக்கல்வி அவசியமா?" எனும் பொருளில் விவாத அரங்கு இடம்பெற்றது.புதூர் இந்து இளைஞர் மன்றத்தினரும் , கல்லடி இந்து மத வளர்ச்சி மன்றத்தினரும் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து, புதுமுகத்துவாரம் விபுலானந்த அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பக்திப் பாமலர்கள் , திருமதி சாந்தாவதி நாகையா அவர்களின் பண்ணிசை என்பன இடம்பெற்றன.

கலை அரங்கு நிகழ்ச்சியில் சித்தாண்டி சிவசக்தி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கரகம், கோலாட்டம், புதூர் இந்து இளைஞர் அறநெறிப் பாடசாலை மாணவிகளின் ஆயர்பாடி நடனம், ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் இல்ல மாணவ மாணவியரின் தாளலய நாடகம் என்பன இடம் பெற்றன.

பஞ்சபுராண ஓதலோடு அருள்நெறிவிழா நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

*******

# புசல்லாவையில் அருள்நெறி விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒழுங்கு செய்து நடாத்திய கண்டிமாவட்ட அருள் நெறி விழா நவமபர் மாதம் 15ம் திகதி சனிக்கிழமை புசல்லாவை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு . குமார் வடிவேல் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்த மஹராஜ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். மட்டக்களப்பு இராம கிருஷ்ணமிஷன் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா அவர்களும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ். இராஜரட்னம் அவர்களும் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்தனர்.

ஆன்மீக ஊர்வலம் மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு இருந்தது. இரட்டைப்பாதை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் காலை 8.00 மணிக்கு விசேட பூஜை ஒழுங்கு செய்யப்பட்டு பூஜை முடிந்ததும் கொழும்பு இராம கிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்த மகராஜ், மட்டக்களப்பு இராம கிருஷ்ணமிஷன் ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்த மகராஜ் ஆகியோர் நாதஸ்வரம், மேளம் முழங்க ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். இந்து இளைஞர்கள் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், ஆலய அறங்காவலர்கள், புசல்லாவை இந்து மக்கள் ஒன்று கூடி கூட்டுப் பிரார்த்தனைப் பாடல்கள் பாடிக்கொண்டு பாடசாலையை வந்தடைந்தனர்.

ஆன்மீக ஊர்வல ஏற்பாடுகளை, ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய அறங்காவலர் திரு செல்லமுத்துப்பிள்ளை கணேசன் தலைமையில், புசல்லாவை இந்து மக்கள் ஒழுங்கு செய்திருந்தனர்.

புசல்லாவை விவேகானந்தா அறநெறிப் பாடசாலை மாணவர்களின், பஞ்சபுராண ஓதலுடன் விழா ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து சுவாமி விபுலானந்த அறநெறிப் பாடசாலை மாணவர்கள் அறநெறிக்கீதம் ஓதினர். வரவேற்புரையினை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலய பிரதி அதிபர் திருமதி ஜீவரத்தினம் நிகழ்த்தினார்.

தொடர்ந்து இராம கிருஷ்ணமிஷன் சுவாமிஜிகள் இருவரதும் ஆன்மீக அருளுரைகள் இடம் பெற்றன. அறநெறிப் பாடசாலை மாணவர்களுடைய கூட்டுப்பிரார்த்தனை மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. மண்டபத்தில் இருந்த அனைவரும் கூட்டுப்பிரார்த்தனையில் இணைந்து பாடினர்.

அருள்மொழியரசி திருமதி . வசந்தா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் ஆன்மீகச் சிந்தனை இடம்பெற்றது. இதில் அறநெறிப் பாடசாலை மேற்பிரிவு மாணவர்கள் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து கம்பளை இந்து இளைஞர் மன்றத்தினர் ஒழுங்கு செய்திருந்த கூட்டுப் பிரார்த்தனை நிகழ்ச்சி மிகச் சிறப்பாக இடம்பெற்றது. அறநெறிப் பாடசாலை கீழ்ப்பிரிவு பாலர் பிரிவு மாணவர்களின் , நல்வழி, ஆன்மீக சிறுவர் கதம்ப நிகழ்ச்சி இடம்பெற்றது.

# புசல்லாவையில் அருள் நெறி விழா



அறநெறிப் பாடசாலை மாணவர்களின் காவடி நிகழ்ச்சியையும் ,
பரத நாட்டிய நிகழ்ச்சியையும் படத்தில் காணலாம்.





அருள் மொழியரசி , திருமதி . வசந்தா வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியினை ,கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ். இராஜரட்னம், ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா ,ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா ஆகியோரும், கூட்டத்தினரும் ரசிப்பதைப் படத்தில் காணலாம்.

# புசல்லாவையில் அருள்நெறி விழா



புசல்லாவையில் நடைபெற்ற அருள்நெறி விழாவில் முறையே ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனாநந்தா, ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தா, திரு. குமார் வடிவேல், ஆசிரியர்கள், திரு. கிருஷ்ணபிள்ளை, திரு. அமிர்தலிங்கம், ஆகியோர் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.



திணைக்களம், அறநெறிப்பாடசாலைகளுக்கென வெளியிட்டு வழங்கும் நூல்களுள் ஒன்றாகிய "இந்து சமய சாரம்" எனும் நூலினை எழுதிய திரு. இ. கந்தையா அவர்கள் அருள்நெறி விழாவில் கௌரவிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். படத்தில் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் உதவிப்பணிப்பாளர்கள் திரு வீ. விக்கிரமராஜா, திரு. குமார் வடிவேல், ஆகியோரும் திருமதி. கந்தையா அவர்களும் காணப்படுகின்றனர்.

அடுத்ததாக அருள்மொழியரசி திருமதி . வசந்தா வைத்தியநாதன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் தலைமையில் "அருள் நெறித் தீபமொன்று ஏற்றிட வாரீர்" எனும் தலைப்பில் ஆன்மீகக் கவியரங்கு இடம்பெற்றது. இதனை திருமதி இராஜேஸ்வரி ஸ்ரீகாந்தா தலைமை ஏற்று நடத்தினார்.

அருள் நெறிவிழா சிறப்புற அமைய புசல்லாவை அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள்,சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலய அதிபர் செ. தமிழ்ச்செல்வன், பிரதி அதிபர், ஆசிரியர்கள்,மாணவர்கள், அனைவரும் பூரண ஒத்துழைப்பு நல்கியமை குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு – திருமதி இராஜேஸ்வரி ஸ்ரீகாந்தா (கலாசார உத்தியோகத்தர்)

# கேகாலை மாவட்டத் தமிழ்க் கலாசார விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,வறக்காப்பொல இந்து மாமன்றத்துடன் இணைந்து கேகாலை மாவட்ட தமிழ்க் கலாசார விழாவினை 22 ம்ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரை வறக்காப்பொல நகர சபை மண்டபத்தில் நடத்தியது.

கலாசார அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ஆர் கைலாசநாதன் அவர்களின் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. கேகாலை சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலய மாணவிகளால், தமிழ் வாழ்த்துப்பா இசைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வறக்காப்பொல இந்து மாமன்றத் தலைவர் திரு . என் . கணேசலிங்கம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் அறிமுகவுரை நிகழ்த்தினார்.

அதன் பின்னர் கலாபூஷணம் திரு . உடப்பூர் சோமாஸ்கந்தரின் "இதிகாசங்கள் காட்டும் சத்தியநெறி" எனும் சொற்பொழிவு இடம்பெற்றது. திருமதி பத்மா சோமகாந்தன் தலைமையில் அறிவுப்புதிர்ப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் தெரணியகலை மியனவிட்ட தோட்டத்தைச் சேர்ந்த சரஸ்வதி அறநெறிப் பாடசாலை மாணவிகளும், வறக்காப்பொல பனாவை தோட்டத்தைச் சேர்ந்த வள்ளுவர் அறநெறிப் பாடசாலை மாணவிகளும், பங்கு பற்றினர்.

திரு . கே. சச்சிதானந்தன் நெறியாள்கையில் இடம்பெற்ற கண்காட்சியினை கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி ஆர் கைலாசநாதன் அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிட்டார். இதனைத்தொடர்ந்து புளக்கோட்டிய தமிழ் மகா வித்தியாலய அதிபர் திரு . டி. சுந்தரலிங்கம் அவர்களின் தலைமையில் விவாத அரங்கு இடம் பெற்றது. "தமிழர் பண்பாடு கலாசாரம் என்பன இன்றைய

தலைமுறையினர்களிடையே மேலோங்கி வருகின்றதா.வரவில்லை" எனும் தலைப்பில் பாடசாலை' ஆசிரியர்கள் வாதிட்டனர். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள கலாசார உத்தியோகத்தர் திருமதி நிர்மலா கருணானந்தராஜா அவர்களின் நன்றியுரையுடன் முற்பகல் நிகழ்ச்சிகள் இனிது முடிவு பெற்றன.

பிற்பகல் நிகழ்ச்சிகள் திருமதி ஆர் கைலாசநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.தெரணியகலை இந்து மாமன்றச் செயலாளர் திரு . எஸ் ரவிக்குமார் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். இவ்விழாவில் கால்நடை அபிவிருத்தி. தோட்ட அடித்தள கட்டமைப்பு . அமைச்சர் மாண்புமிகு செள. தொண்டமான், விமான சேவைகள் சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு தர்மசிறி சேனநாயக்க, ஆகியோர் பிரதம விருந்தினராகவும் கல்வி. உயர்கல்வி பிரதி அமைச்சர் பேராசிரியர் விஸ்வாவர்ண பாலா. பாராளுமன்ற உறுப்பினர்கள் கௌரவ ஏ . எம். டி. ராஜன், கௌரவ மனோ விஜயரத்ன, சப்பிரகமுவ மாகாணசபை உறுப்பினர் கௌரவ பெ . பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்தனர். தெரிவு செய்யப்பட்ட ஐந்து கலைஞர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

வரவேற்புக்கீதம், உடுக்கு,கும்மி,காமன்கூத்து, தாலாட்டு,ஒப்பாரி, தீபநடனம். தப்பு,புலியாட்டம், நாடகம்,திருமண வாழ்த்து,போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினர்களின் உரைகள் இடம்பெற்றது.

இறுதியாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. விக்கிரமராஜா அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் யாவும் இனிது நிறைவு பெற்றன. பனாகை இந்து மாமன்றச் செயலாளரும். வறக்காப்பொலை இணைப்பாளருமாகிய திரு எஸ். ஒ. பி. சிவராஜா அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.

தொகுப்பு-
திருமதி நிர்மலா கருணானந்தராஜா
(கலாசார உத்தியோகத்தர்)

✦✦✦✦✦✦

## குந்தியின் வேண்டுகோள்....

குந்தி கிருஷ்ண பரமாத்மாவிடம் அதிசயமான ஓர் விண்ணப்பத்தைக்கூறினாள்."பரமாத்மா! என்னை எப்பொழுதும் கஷ்டத்தில் மூழ்க வைத்திரு. அப்போது தான் ஒரு கணமும் உன்னை மறக்காமல் நான் அழைத்த வண்ணம் இருப்பேன்!" என்று குந்தி வேண்டிக்கொண்டாள்.

குந்தியின் பிரார்த்தனை வீண்போகவில்லை. குந்தியின் மைந்தர்கள் அழைத்த போதெல்லாம் கிருஷ்ண பரமாத்மாவின் ஆதரவும், அனுக்கிரகமும் அவர்களுக்குக் கிடைத்தது.

பகவானிடம் நம்பிக்கை வைக்க வேண்டும். அவருடைய அருளால் கிடைக்கும் உதவிகளை நன்றியுடன் நினைவு கூர்ந்து பிரார்த்தனையிலும் ஈடுபட வேண்டும்.

- ஸ்ரீபாபுதீக்ஷிதர்

# பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும்

கும்பாபிஷேகம் நான்கு வகைப்படும். ஆவர்த்தம்,அனுவர்த்தம், புனஸ்வர்த்தம்,அந்தரிதம் என்பவை. தெய்வ மூர்த்தங்களையும், தேவாலயத்தையும் புதிதாக நிர்மாணித்தல் ஆவர்த்தம். தேவாலயமோ, தெய்வ மூர்த்தங்களோ வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டால் அவற்றை மறுபடியும் அமைப்பது அனுவர்த்தம்.

தேவாலயம் ஜீர்ணமாகி அஷ்டபந்தன மருந்து சாத்தி, ஜீர்ணமானதை மீண்டும் புதுப்பிப்பது புனஸ்வர்த்தமாகும். கள்வர்களால் அபகரிக்கப்பட்ட மூர்த்திகளை மீண்டும் பிரதிஷ்டை செய்தல் அந்தரிதமாகும்.

**கும்பாபிஷேகம்:** ம்ப திர்த்தத்தில் இறைவனை ஆவாஹனம் செய்து,யாகம் மூலம் நடத்தி மந்திர சக்தியை உருவேற்றி, அந்த கும்ப திர்த்தத்தை,இறை பிம்பத்தில் அபிஷேகம் செய்வதே கும்பாபிஷேகம்.

இறைவனின் உடலாக கும்பத்தையும் மேல் சுற்றப்பட்ட நூல் 72,000 நாடி நரம்புகளையும் ,உள்ளே ஊற்றப்பட்ட நீரை ரத்தமாகவும், அதனுள் போடப்பட்ட ஸ்வர்ணம் ஜீவனாகவும்,மேலே வைக்கப்பட்ட தேங்காய் தலையாகவும், கும்பத்தின் கிழ்ப்பரப்பப்பட்ட தானியம் ஆசனமாகவும் பாவித்து,வஸ்த்திரம்,சந்தனம்,புஷ்பம் இவற்றால் அலங்கரித்து யாக மேடை அமைப்பது வழக்கம். இந்த சாதாரண கும்பம் உயிர்க் கலசமாக,ஜீவ கலசமாக மாறுகிறது. கூர்ச்சம் என்று சொல்லப்படுகிற தர்ப்பைப் புல்லையும் கலசத்தின் மேல் வைத்து ஆராதிக்க வேண்டும்.

யாகம் செய்யாது எந்த ஒரு கர்மாவும் பூர்த்தியாகாது. யாகத்தில் திரவியங்களையும், நெய், சமித்து, ஹவிஸ் முதலியவற்றை வேத மந்திரங்கள் கூறி ஆகுதியாக அளித்து, இந்தப் புலப்படாத சக்தியை கும்பத்தில் உருவேற்றுவது தான் முறை

இறவாத வரம் பெற்ற வாஸ்து புருஷனின் உபத்திரவம் இல்லாமலிருக்க வாஸ்து புருஷனின் காவல் புரியும் ஐம்பத்தி மூன்று தேவர்களுக்கு செய்யப்படுவதே வாஸ்து சாந்தியாகும். இது கும்பாபிஷேகத்தின் போது தொடக்கத்தில் செய்யப்படுவதாகும்.

**பிரதிஷ்டை:** விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்யு முன் யந்திரத்திற்குள் பொன்,வெள்ளி, வைரம் முதலிய மதிப்புமிக்க பொருள்கள் போடப்பட்டு மூடப்படுகின்றன.பின் விக்கிரகத்தை அமைத்து மூலிகை மருந்துகளால் கெட்டித்து மந்திரங்களுடன், பிரதிஷ்டை செய்யப்படும்.இவ்விதமாக உலோக சக்தி,மனோசக்தி,மந்திரசக்தி, யந்திரசக்தி,ஆன்மசக்தி ஆகிய பல வகைச் சக்திகளால் கல் தெய்வமாகிறது. இவ்வித சக்திகளால் கல் விக்கிரகம் ஈர்ப்பு சக்தி,உயிர்ப்பு சக்தி, கவர்ச்சி சக்தி பெற்று விடுகிறது.

மந்திர சக்தியோடு நட்ட கல் அதனடியில் கெட்டியாக்கப்பட்ட மூலப்பொருட்களின் அணுக்கள் நாளடைவில் சக்திகளை ஈர்த்துச் சொல்லப்படும் மந்திரங்களைத் தாங்கி ஒலி தாங்கியாக மாறி, பேசுவதை எதிரொலித்து, நட்டகல் பேசும் சக்தியைப் பெறுகிறது.தெய்வீக சக்தியைத் திரட்டி மூர்த்தி வடிவில் சேமித்து வைப்பதே ஆலயங்களில் விக்கிரகங்கள் அமைப்பதின் தத்துவம். விக்கிரகம், வி– விஷேசம், கிரகம்–இடம் இறைவன் விஷேசமாக இருக்கும் இடம்.

**அஷ்ட பந்தன மருந்து சார்த்துதல்:** விக்கிரகங்கள் பீடத்தில் ஸ்திரமாக இருக்க அஷ்டபந்தனம் என்ற கலவையை சாத்துவது வழக்கம். கொம்பரக்கு, சுக்கான்தூள்,குங்கிலியம், கற்காவி,செம்பஞ்சு,சாதிலிங்கம்,தேன்மெழுகு எருமைவெண்ணெய்,இவைகளை கலவையாக்க ஒன்று இடித்துச் சேர்ப்பது. மற்றொன்று காய்ச்சுவது ஆகும்.

யாகசாலை முப்பத்தாறு தத்துவ ஸ்வரூபமரனது. அஷ்டமூர்த்தங்கள் அடங்கியது.ஒன்பது குண்டங்களில் ஒன்பது அக்கினி வளர்க்கப்படும்.யாக குண்டங்களைச் சுற்றி முறுக்கிய பச்சைத் தர்ப்பைகளைப் பரப்பி ஆல் ,அரசு முதலிய சமித்துக்களை குண்டலத்திலிட்டு, கடைந்தெடுக்கப்பட்ட சுத்தமான அக்கினி கொண்டு, அதற்குரிய மந்திரங்களைச் சொல்லி தெய்வங்களை மனத்தில் தியானித்து ஸ்ருக்.சுருவம் என்னும் உபகரணங்களைக் கொண்டு நெய் சொரிந்து அக்கினி வளர்க்க வேண்டும். இப்படி மந்திரம், கிரியை, பாவனை மூலம் வளர்க்கப்படும் அக்கினியிலிருந்து எழும் புகையும்,வேத ஒலியும் ,தேவார திவ்ய பிரபந்த ஒலியும் அருட் சக்தியைத் தூண்டி பிம்பத்தில் பிரகாசிக்கச் செய்யும்.

யாக சாலையில் நடைபெற வேண்டிய கிரியைகள் முற்றுப் பெற்ற பின் மீண்டும் தெய்வீக சக்தி ஆலய விக்கிரகத்தினிடம் அமைய வேண்டும். இச் சக்தியை செலுத்தும் தர்ப்பக்கயிற்றின் வழி அச்சக்தி கும்பத்திலுள்ள நீரினால் சேர்க்கப்பட்டு, விக்கிரகத்தின் மீதும்,கோபுரகலசத்திலும் அபிஷேகம் செய்வது முறை.

இன்னதெனக் கூறமுடியாத பெருமைகளை உடையவர் இறைவன்.அவர் உருவம், அருவுருவம்,அருவம், என்ற முத்திரு மேனிகளைக் கொண்டு ஆலயங்களில் எழுந்தருளியிருக்கிறார். மனிதராகப் பிறந்த எமக்கு ஈஸ்வரன் இந்திரியங்களையும்,அந்த கரணங்களையும்கொடுத்ததோடு நிற்கவில்லை. அத்துடன் பகுத்தறிவையும் சக்தியையும் கொடுத்திருக்கிறார். ஆன்மா என்ற அரிய ஒன்று நம்மிடம் உள்ளது. இது அழியாதது. ஆனால் இதற்கு பந்தம் உண்டு. பந்தங்களில் இருந்து விடுபட முயல்வதே நம் கடமை.அந்நிலையையே முத்தி என்றும்: வீடுபேறு என்றும் கூறுவர்.இந்நிலையை அடைவதே புருஷார்த்தங்களில் உயர்ந்தது.

இதற்கு வழிகள் பல உண்டு. அவற்றுள் சுலபமானதும் யாவரும் அனுஷ்டிக்கக் கூடியதும் நிச்சயமான பலனைத் தரத் தக்கதுமான வழி ஈஸ்வர பூசையும் ஆலய வழிபாடுமே ஆகும். இவ்வழிபாட்டால் முக்தியோடல்லாமல் தர்மம்,அர்த்த,காமம் என்ற பல புருஷார்த்தங்களும் கிடைக்கின்றன. சுகங்களைப் பெறுதல்,துன்பங்களை நீக்குதல் ஆகிய இகலோகப் பேறுகள் பெற்ற பல்லோர்களின் சரித்திரங்களே நம் ஸ்தல புராணங்கள். அவற்றைப் பொய் என்று அகற்றி விடுதல் நம் அறிவீனத்தையே காட்டும். ஈஸ்வரனை வழிபட புறப்பூஜை,அகப்பூஜை என்ற இரண்டில் புறப்பூஜை எளியது. இதன் மூலமே அகப்பூஜை செய்யும் தகுதியைப் பெற முடியும்.

**கோபுர கலச பெருமை:** இதன் அடிப்பாகம் விரிந்த தாமரை இதழ் போல தோற்றமுள்ளது.மேற் பாகம் கண்டம் எனப்படும்.இது ஒரு தண்டு போன்றது.இதை அடுத்து அரடா என்ற அங்கம்.அரடா வட்ட வடிவில் பருமனான தோற்றமுள்ளது.இதை அடுத்து மீண்டும் கண்டம் என்ற தண்டுப்பகுதி.இதன் மேல் கலசத்தில் தான் குடம். இக்கலசங்கள் ஆலய விமானங்களுக்கு அழகு கூட்டுவதுடன் பக்தி உள்ளங்களில் நிலையான இடமும் பெறுகின்றன.

— ◎◎◎◎◎ —

சிரிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.வாழ்க்கையின் பிரச்சனைகளைப் பார்த்து - உங்களைப் பார்த்து - நகைச்சுவை உணர்வோடு இருங்கள்.

# சிறிய ஆலயங்களுக்கான பூஜை நடைமுறை விதிகள்

எஸ் . தெய்வநாயகம்
உதவிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)

## ஆலயம்

மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனை மெய்யுருக நெஞ்சுருக வழிபடும் இடம்.இது அமைதியான இயற்கைச் சூழ்நிலையில் அமைதல்வேண்டும்.மூலஸ்தானத்தில் இறைவனையோ அல்லது இறைவியையோ வைத்து வழிபடுவது சிறப்பைத் தரும். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்." என்பது பழமொழி. எனவே அதற்கேற்ற முறையில் சிறிதாக இருந்தாலும் அதைப் புனிதமாகப் பேணி நிர்வகிக்க வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

## மூலஸ்தானத்தை கற்சிலை சுவாமியை சுத்தமாக வைத்திருத்தல்.

இறைவன் உறையும் கர்ப்பக்கிரகம் அதாவது மூலஸ்தானம். எப்பொழுதும் சுத்தமாக இருக்க வேண்டும். மூலஸ்தான கற்சிலை சுவாமிக்கு எண்ணெய்க் காப்பு நாளாந்தம் சாத்துதல் அவசியம். நாளாந்தம் எண்ணெய்க் காப்பு வைக்க முடியாதவர்கள் ஒரு கிழமைக்கு ஒரு தடவையேனும் சுவாமிக்கு எண்ணெய்க் காப்பு வைத்தல் வேண்டும். எண்ணெய்க் காப்பு பெரும்பாலும் எண்ணெய் கொண்டதாய் அமையும் . மாக்காப்பும் இடையிடை சாத்துதல் அவசியம். இது புளித்த தயிர்,அரிசிமா முதலியவை கொண்டதாய் அமைவு பெறும். கற்சிலை சுவாமியில் படிந்திருக்கும் அழுக்குகளை அகற்ற இது பெரும்பாலும் உதவும். நீரினால் அபிஷேகங்கள் நடைபெற்று சுவாமி அலங்காரம் செய்யப்படுவதற்கு முன் சுத்தமான துணியினால் கற்சிலை சுவாமியை நன்றாகத் துடைத்து தண்ணீர் சுவாமியில் ஒட்டியிராமல் பார்க்க வேண்டும்.கற்சிலை இல்லாமல் ஐம்பொன் உலோகத்தில் சுவாமி மூலஸ்தானத்தில் இருந்தால் எண்ணெய்க் காப்பு தவிர்த்து புளிக் காப்பு இடுவது மிகவும் மேலானது.

## மூலஸ்தான நிலம்

மூலஸ்தானத்தில் அழுக்குச் சேராமல் பார்த்துக் கொள்வது மிக நல்லது.அடிக்கடி அபிஷேகங்கள் நடைபெறுவதால் பழங்கள் மற்றும் பொருட்களின் சாறுகள் தேங்கி நின்று துர்நாற்றத்தை ஏற்படுத்தலாம். இதற்குச் சலவைச் சோடா போட்டு நிலத்தை துப்புரவு செய்தல் வேண்டும். ஆலயத்தில் அமைந்துள்ள விளக்குகளை எப்பொழுதும் துப்புரவாக வைத்திருத்தல் மிகவும் நல்லது. அடிக்கடி புளிக்காப்பிட்டு விளக்குக்களை துப்புரவு செய்யலாம். எண்ணெய்,திரி என்பன குறையாமல் பார்த்துக் கொள்வது மிகவும் விரும்பத் தக்கது.மூலஸ்தானத்தில் அபிஷேகம் செய்யும் போது தயிர்,பால், பழங்களின் சாறுகள் மூலஸ்தான சுவர் மூலைகளில் சென்று உறைந்து நிற்கும். அவைகளை கரண்டியினால் அள்ளி வெளியில் வீசிவிட வேண்டும். இல்லையேல் அதிகநாள் அப்படி தேங்கி நின்று அவைகள் கிருமிகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. இப்படி ஏற்படாமல் பார்த்துக்கொள்வது அவசியம்

## சுவாமிக்குச் சாத்தும் பட்டு

மூலஸ்தான சுவாமிக்குச் சாத்தும் பட்டு எப்பொழுதும் துப்புரவாக இருத்தல் வேண்டும்.புதிய பட்டுக்களை நாளாந்தம் துவைத்து சுவாமிக்குச் சாத்தலாம்.அத்தோடு திரைச்சீலைகள் யாவும் அழுக்குப் படியாமல் துப்புரவாக இருத்தல் வேண்டும். திரைச் சீலைகளில் கைகளைத் துடைப்பதும், சுவாமிக்குச் சாத்தும் பட்டில் கை, முகம் துடைப்பதையும் எக் காரணம் கொண்டும் செய்தல் ஆகாது.

### புற வீதிகளின் சுத்தம்

கோயில்களில் உள் வீதி , வெளிவீதிகளில் துப்புரவு செய்து சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருத்தல் மேலானது.புல்,பூண்டுகள், அழுக்குகள்,குப்பைகூழங்கள் சேராமல் மேற்படி வீதிகளைப் பார்த்துச் கொள்ளுதல் மிக அவசியம். வாராந்தம் ஒரு நாளிலாவது ஆலயத் தைத் தண்ணீர் விட்டுக் கழுவுதல் வேண்டும். சிறிய ஆலயங்களில் ஒவ்வொரு நாளும் ஆலயங்கள் தண்ணீர் விட்டு சுத்திகரிப்பது விரும்பத்தக்கது.அபிஷேகம் செய்யும் தண்ணீர்,பால்,பழச்சாறுகள் புறவீதிகளில் தேங்கி நிற்காமல் அவைகளை தூரத்தில் கொண்டு செல்ல வடிகால் அமைப்பது அவசியமானது.

ஆலயங்களில் மூலஸ்தானம் மற்றும் சுற்றுப்புறக் கோயில்கள் உள்ள பகுதிகளில் நாய்,பூனை போன்றவைகள் உட்சென்று அசுத்தம் செய்யாமல் பார்த்துக் கொள்வது மிகவும் நன்று. இதற்கு கதவுகள் போட்டு பூட்டி வைக்கலாம். திருமெழுக்கிடுதல்,தூபங்கள் போடுதல்,ஆலயத்திற்கு மிகவும் சுகந்தத்தை ஏற்படுத்தும். கற்பூரங்கள் பற்ற வைப்பதற்கு ஏற்ற தட்டுக்கள் உரிய இடத்தில் வைத்தல் நல்லது. கண்ட கண்ட இடங்களில் கற்பூரம் கொளுத்துவது நல்லதல்ல. கற்பூரம் எந்த இடத்தில் பற்ற வைக்க வேண்டுமோ அந்த இடத்திலேயே அவை பற்ற வைக்க வேண்டும். அதற்குத் தனியான பாத்திரம் உரிய இடத்தில் வைத்துப் பேணப்பட வேண்டும்.எல்லா இடங்களிலும் கற்பூரம் கொளுத்துவதால் ஆலயம் புகை படியும் தன்மைக்கு உட்படும்.

### பூஜை நடைமுறைகள்

ஆலயங்களில் பூஜைகள் தினசரி காலை,பகல், மாலை நடத்தல் வேண்டும்.பகல் நடத்த முடியாவிட்டால் காலையும் மாலையும் கண்டிப்பாக பூஜைகள் இடம்பெறுவது மிகவும் நன்மை பயக்கும்.வெள்ளிக்கிழமைகளில் பூஜைகள் சிறப்பாகவும்,கூட்டுப்பிரார்த்தனை, சொற்பொழிவுகளுடன்,இடம் பெறுவது சமய உணர்வை எல்லோருக்கும் ஏற்படுத்தக் கூடியதாக அமையும்.காலைப்பூஜை 5.30 மணியிலிருந்து 7.00 மணிக்குள்ளும், மாலைப் பூஜை 6.00 மணியிலிருந்து 7.00 மணிக்குள்ளும் நடைபெறுவது விரும்பத்தக்கது.இரு பூஜைகளும் செய்ய முடியாத ஆலயங்களில் மாலையில் மாத்திரமாவது விளக்கு வைத்தல் அவசியம். நாளாந்தம் விளக்கு வைத்து வழிபடும் அளவிலாவது ஒரு ஆலயம் அமைந்திருப்பது மிகவும் அவசியம்.

### அர்ச்சகர் அல்லது பூசகர் ஒழுக்கம்

பூசை செய்பவர்கள் சமயதீட்சை பெற்றிருத்தல் அவசியம். அல்லது சமய அனுட்டானங்கள் நன்கு தெரிந்தவராக அமைதல் வேண்டும். அவருடைய உடுப்புக்கள் சுத்தமாக இருத்தல் வேண்டும். அழுக்கடைந்த ஆடைகளை அணிதல் கூடாது. தோய்த்துலர்ந்த ஆடைகளை நாளாந்தம் அணிதல் விரும்பத்தக்கது. மதுபானம் அருந்ாதவராகவும், மாமிசம் உண்ணாதவராகவும் இருத்தல் வேண்டும். கெட்ட எண்ணங்களுக்கு மனதை அலைக்கழிப் பவராக இருத்தல் கூடாது.குரு உபதேசம் பெற்றால் மந்திரம் சொல்லலாம் . இல்லையேல் நாமவழி உச்சரிக்கலாம். அல்லது இறையருள் மிக்க பாடல்களைப் பாடிப் பூஜைகள் செய்யலாம். அம்மன் மற்றும் தெய்வப் பாடல்கள் அம்மன் ஆலயங்களில் இடம்பெறுதல் விரும்பத்தக்கது. பூஜை செய்யும் போது மதுபானம் மாமிசம் அருந்தியிருத்தல், புகைப்பிடித்தல், வெற்றிலை சாப்பிடுதல் கூடாது.

### பிரசாதம்

இறைவனின் பிரசாதம் எனக் குறிப்பிடப் படுவன திருநீறு,தீர்த்தம்,பொட்டு,பூ என்பன. இவைகள் வணங்க வரும் அடியார்களுக்கு ஒரு ஆலயத்தில் கண்டிப்பாக கொடுக்கப் படல் வேண்டும்.இவைகள் கொடுக்கப்படும் போது அவைகளுக்குரிய பாத்திரங்கள் நாளாந்தம் துப்புரவு செய்யப்பட்டு தூய்மையுடன் பிரசாதங்கள் வைக்கப் பட்டு வழங்கப்படுதல் மிக அவசியமானது.

### நைவேத்தியம்

பொங்கல்,அவல்,கடலை,மோதகம்,பழம், பாக்கு இவைகள் இறைவனுக்கு நைவேத்தி

யமாகும். இவற்றை வைத்து வழிபட முடியாதவர்கள் பாக்கு, பழம், பூ வைத்து வழிபடுவது மிகவும் முக்கியமாகும்.

## விபூதி

பசுவின் சாணத்தைக் கொண்டு அதை எரித்து நீறாக்கிய வெண்ணீறு. இதை மிகவும் புனிதமாக மதிக்க வேண்டும். கண்ட இடங்களில் கொட்டுதல் நல்லதல்ல.உரிய இடத்தில் வைத்து உரிய வேளையில் வழங்க வேண்டும்.

## விபூதி கொடுக்கும் முறை

விபூதி மடலில் திருநீற்றை நிரப்பி கட்டைவிரல்,மோதிரவிரல்,நடுவிரல் கொண்டு சிறியதாக எடுத்து வழங்குதல் வேண்டும். கூடுதலாக விபூதி வழங்கினால் குறித்த அளவு நெற்றியில் பூசிவிட்டு மிகுதியை என்ன செய்வது எனத்தெரியாமல் நிலத்தில் கொட்டியோ, வாயில் போட்டோ விடுவார்கள்.இதை தவிர்த்துக் கொள்ள சிறிது வழங்குவது சிறப்பைத் தரும்.விபூதி மடல் அழுக்கடையாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியமாகும்.கண்ட கண்ட பாத்திரங்களில் விபூதியை வைக்காமல் விபூதிமடல் போன்ற அதற்கென உரிய பாத்திரங்களில் வைத்திருப்பது சிறப்பைத் தரும்.

## தீர்த்தம்

இளநீர்,பால்,நீர் என்பன கொண்டு அமையும்.பஞ்சபாத்திரத்தில் உத்தரணி கொண்டு தீர்த்தம் வழங்கப்படுதல் நன்று. தீர்த்த பாத்திரத்தை தினமும் சுத்தப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். நாளாந்தம் கழுவி, தீர்த்தம் வழங்க உபயோகிப்பது மிகவும் நன்று. தீர்த்தம் வழங்கும் போது தீர்த்தப் பாத்திரத்தில் வைக்கப்படும் கரண்டி சிறிதாக இருத்தல் அவசியம். கொஞ்சமாக வழங்க வேண்டும்.

## பொட்டு

சந்தனக் கட்டையில் அரைத்ததாகவும் அல்லது கூட்டுப்பொருட்கள் சேர்த்ததாகவும் அமையலாம்.சந்தனம், குங்குமம், மஞ்சள் என்பன பொட்டுக்களுக்குப் பயன்படுத்தலாம். தினமும் சந்தனம், குங்குமம் வழங்கும் பாத்திரம் சுத்தப்படுத்தப்படல் வேண்டும். பூசைகள் முடிவுற்றதும் அன்றைய தினமே சந்தனம் பாவிக்கப்படும் பாத்திரத்தை சந்தனத்தைக் கொட்டி வேறு பாத்திரத்தில் வைத்து விட்டு கழுவிச் சுத்தம் செய்து துடைத்து வைக்க வேண்டும்.அடுத்த நாள் சந்தனம் போட்டு வழங்குவது சிறப்பாக இருக்கும்.இது துர்மணம் பிடிப்பதைத் தவிர்க்கும்.

## ஆலய உபயோகப் பொருட்கள்

வீட்டில் பாவனையில் உள்ள பொருட்களை ஆலயப்பாவனைக்கு உபயோகப்படுத்தல் ஆகாது..ஆலயத்தின் மடப்பள்ளிப் பாவனைக்கும், உள் பாவனைக்கும் வெவ்வேறான பாத்திரங்களை உபயோகப்படுத்தல் வேண்டும். சிலர் வீட்டி விருந்து பாத்திரங்களைக் கொண்டு வந்து ஆலயத்திற்குப் பயன்படுத்துவதும் பின் வீட்டிற்கு கொண்டு செல்வதும் உண்டு. இது மிகவும் பாதகமான செயல். இதைத் தவிர்த்து, தனியான பாத்திரங்களை உபயோகப்படுத்தல் வேண்டும்.

## நந்தவனம்

மல்லிகை,துளசி,நந்தியாவட்டம்,எலுமிச்சை, செவ்வரத்தை,பவளமல்லிகை போன்ற பூசைக்கு உகந்த பூமரங்களும் கொடிமல்லிகை,நீலாம்பரம், தாமரை போன்ற கொடி நீர்ப்பூக்களும் நந்தவனங்களில் அமைவு பெறுதல் சிறப்பாகும்.ஓரளவு இந்த நந்தவனங்களில் இருந்தே பூசைக்குரிய பூக்கள் பெறப்பட வேண்டும்.வீடுகளில் இருந்து கொண்டு வரப்படும் மலர்கள் புனிதமாக இருத்தல் அவசியமாகும். பூஜைக்குரிய மலர்கள் எடுக்கும் பொழுது நிலத்தில் விழுந்த பூ,வாடிய பூ பூச்சிகள் கடித்த பூ ஆகியன சாமிக்குச் சாத்துவதற்கு எடுக்கக் கூடாது.ஒரு ஆலயத்திற்கு மிகவும் அவசியமானது நந்தவனம்

இயற்கையின் சூழலிலேயே இறைவன் இருக்கிறான். பூஜைக்குத் தேவையான அத்தனை மலர்க ளையும் நந்தவனத்தில் வளர்த்திட முயற்சிக்க வேண்டும்.

### சுவாமி தரிசனம்

சுவாமி தரிசனம் பண்ணும் போது ஆண்கள் ஒரு புறமாகவும்,பெண்கள் ஒரு புறமாகவும் நின்று வழிபடுதல் வேண்டும். வரிசைக் கிரமமாக நின்று அல்லது இருந்து வழிபடுதலும் அமைதியாக இருத்தலும் மேலானது. கற்பூரதீபம் காட்டி முடித்து எமது தரிசனத்திற்கு வரும் போது முண்டியடித்துக் கொண்டு தொட முற்படுவதும் திருநீறு. தீர்த்தம்,பொட்டு. கொடுக்கும் போது முண்டியடிப்பதும் சிறப்பானதல்ல.பிரசாதம் வாங்கும் போது அமைதியான முறையில் வாங்க ஆலயத்திற்கு வரும் அடியார்களை தயார்படுத்திக் கொள்வது ஆலய நிர்வாகத்தினதும்,அர்ச்சகர்,பூசகரினதும்.தலையாய கடமையாகும்.

### திருவிழா

நாளாந்தம் பூஜை வழிபாடுகள் நடந்து வந்தாலேபோதும். திருவிழாச் செய்ய வேண்டும் என்பதல்ல. வசதி இருப்பின் வருடத்தில் ஒருமுறை வரும் திருவிழாவை சிக்கனமாக இறைவனுக்குரிய அபிஷேக ஆராதனை களுடன் செய்து முடிப்பது விரும்பத்தக்கது. ஆடம்பரச் செலவுகளும், கேளிக்கைகளும் திருவிழாவில் இடம்பெறுவது முக்கியமல்ல. அன்பர்கள், அடியார்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து மனமுருக மெய்யுருக இறைவனை வழிபடுவதே மிகவும் முக்கியம். இவைகளை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும். எனவே சிறு ஆலயங்களை வழிநடத்தும் ஆலய நிர்வாகஸ்தர்களும்.அர்ச்சகர், பூசகர்களும் மேற்காட்டிய நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தால் அதுவே சிறப்பானதொரு ஆலய வழிபாடு அமைய வழிவகுத்ததாகும்.

—*****—

## ஸ்ரீராம ஜெயம்

ஒரு இரும்புத்துண்டை கல்லிலே மேலும் மேலும் தேய்த்துக் கொண்டிருந்தால் சூடு ஏறிக் கொண்டே இருக்குமல்லவா? அதைப் போலவே "ராம் ராம் ராம் ராம்" என்று இரும்புத்துண்டைப் போல் ஜடமான மனதை அப்படி இப்படி அகண்டமாகத் தேய்த்து வந்தால் சூடு உண்டாகிறது.பகவானோ,மிருது,மதுர இருதயத்தை உடையவன்.ஒரு நிலையுடன் ஒரே எண்ணத்துடன் சூடு வெளிக்கிளம்பும் போது ,அது பரமாத்மாவின் வெண்ணெய் போன்ற இருதயத்தை கரையச் செய்யும், அசையச் செய்யும்.

## திரும்பிப் போகும் தபால்

உன் விலாசத்திற்கு வந்த கடிதத்தை நீ பெற்றுக் கொள்ளாமல் போனால் போஸ்டல் இலாகாவினர் அதை அனுப்பியவர்கள் யார் எனத் தேடி, அவர்களுக்கே கொடுக்கிறார்கள். அதைப் போலவே உன்னை யாராவது தூஷித்தால் அந்த தூஷணையை எண்ணாமல் நீ போனால் தூசிக்கப்பட்டவர்களையே சேரும். அதைப் பற்றி நீ எண்ணினால், அப்போதே அது உனக்கு கஷ்டத்தைக் கொடுக்கிறது. ஆனதால் அதை அங்கீகாரம் செய்யாமல் சும்மா இருந்தால் போதும். அது அந்த துஷ்ட புத்தியுள்ளவனையே போய் அடைகிறது.

- ஸ்ரீ சாயிபாபா -

# நமது உடல் ஓர், ஆலயம்

இயற்கையுடன் ஒன்றி வாழ்வது தான் மனித இயல்பு.எவ்வளவு தான் செயற்கை முன்னேற்றங்கள் தோன்றி இயற்கையை ஒடுக்க வந்தாலும்,'இயற்கை ஒரு நாள் சீறும். அதனை வெல்ல யாராலும் முடியாது!'. என்ற பயம் எல்லோர் மனத்தின் அடித்தளத்திலும் கனலாய் எரிந்து கொண்டு தான் இருக்கிறது.

பரந்து விரிந்திருக்கும் இயற்கையை பல்வேறு வடிவங்களில் மனிதன் காலங் காலமாய் வழிபட்டு வந்தான்.உதயமாகும் சூரியன்,மரம்,செடி,ஆறு,கடல்,மலை,என்று தன் முன் தோன்றியஅத்தனை இயற்கை வடிவங்களையும் வழிபட்டு வந்தான். இன்னும் சில வழிபாடுகள் இருந்து வருகின்றன.

'எங்கேயோ ஒரு சக்தி இப்படி ஒரு மாற்றங்களை இயக்கி வருகிறது.'என்று மட்டும் எண்ணி நின்று விடாமல் .அந்தச் சக்திக்கு தன்னைப் போலவே ஓர் உருவம் கொடுத்தான்.

பல்வேறு காரியங்கள் செய்வதால் பல கை கால்கள் கொடுத்து. அதற்கான ஆயுதங்களையும் கொடுத்தான்.

தாய்–தந்தை–மகன்–மகள்–அண்ணா–தம்பி – மாமா – அத்தை – என்ற முறைகளையும் அங்கு ஏற்படுத்தினான்.

பிரத்தியேக சக்தி வாய்ந்த இவர்களுக்கென்று பிரத்யேகமான இடவசதி ஏற்பாடு செய்தான்.எல்லோரும் அங்கு சென்று வழிபட ஆயத்தங்கள் செய்தான். இப்படித்தான் ஆலயம் தோன்றியது.

'ஆ' என்றால் பசு: 'லயம்' என்றால் ஒடுங்குதல். பசியின் கொடுமை அடங்கும் வரையில் மனிதன் மிருக உணர்ச்சியுடன் இருக்கிறான்.பசி அடங்க பால் அளித்திடும் பசுவை தெய்வமாக வழிபட்டு முப்பத்து முக்கோடி தேவர்களும் பசுவினுள் அடங்கியிருப்பதால் ஆலயம் என்றும் 'கோ' வின் 'இல்லம்' என்றும் அழைக்கலாயினர்.

நல்ல பல விஷயங்கள் நடக்கும் ஒரு கூடும் இடமாக கோயில் அமைந்தது.கலாசார மண்டபமாக பல தினங்கள் பல அற்புத நிகழ்ச்சிகளைஅங்கு நடத்தி மகிழ்ந்தனர். சரித்திர ஏடுகள் தரும் கல்வெட்டுக்கள் பல. முக்கிய வரலாறுகளை கோயில்களில் தான் இன்றும் காணலாம். பற்பல கால கட்டங்களில் இருந்து வாழ்க்கை முறை யார் ஆண்டார்.எவர் வீழ்த்தப்பட்டார் என்ற சரித்திரத் தகவல்கள் அடங்கிய இடமாக ஆலயங்கள் இருக்கின்றன.

ஆதிகாலத்தில் மரத்தாலும் களிமண்ணாலும் கோயில்கள் கட்டப்பட்டாலும்,காலப்போக்கில் அழியாத பாறைகளில் கோயில்களை அமைத்தனர். சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் கோயில்கள் எழுப்புவதைத் தான் மிகவும் முக்கியமானதாகக் கருதி வந்தனர்.

> உங்கள் அருகில் இருப்பவரின் தோள் மீது அமர்ந்திருக்கும் ஈயை விரட்ட கோடரியை வீசி விடாதீர்கள்.

ஆகம சாத்திரப்படி கட்டப்பட்ட கோயில்களில் உருவ அமைப்பு,மனித உடலமைப்பையும் - மன அமைப்பையும் கொண்டதாகும்.மனித படைப்பைத் தான் எல்லாவற்றிற்கும் மையமாகக் கொண்டு ஆலயங்களை உருவாக்கினர்.

அதனால் தான் நமது உடல் ஓர் ஆலயம், அதில் ஆத்மா த்தான் அழிவற்ற ஆண்டவன் என்ற தத்துவம் ஏற்பட்டது.மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பே ஆலய அமைப்பாகும்.

யோகசாத்திரத்தின் அமைப்பின்படி மனிதனின் நிற்கும் நிலையோ அல்லது உட்கார்ந்திருக்கும் நிலையோ தான் கோயில் அமைப்பாகும்.இந்த நிலை தான் ஒரு கோயிலின் விமான அமைப்பின் அடித்தளமாகும்.

| மனித உடலமைப்பும் | கோயில் அமைப்பும் |
|---|---|
| * தலை | கர்ப்பக்கிரகம் |
| * கழுத்து | அர்த்த மண்டபம் |
| * மார்பு | மகா மண்டபம் |
| * வயிறு | ஸ்தம்ப மண்டபம் |
| * தொடை | சபா மண்டபம் |
| * முழங்கால் | முதல் வாசல் |
| * கால்கள் | கல்யாண மண்டபம் , உற்சவ மண்டபம் |
| * பாதங்கள் | கோபுரவாசல் |

கர்ப்பக்கிரகத்தில் தான் ஆண்டவனின் திருஉருவச்சிலை ஸ்தாபனம் செய்யப்பட்டு ஆராதிக்கப்படுகிறது.அர்த்த மண்டபத்தில் நின்று அர்ச்சகர் பூசை செய்கின்றார்.

மகா மண்டபம் - உற்சவ காலங்களில் வழிபட்டு வரப்படும். உற்சவமூர்த்திகள் இருக்குமிடம்.ஸ்தாபன மண்டபம் - ஹோமங்கள் செய்யப்படும். ஹோம குண்டங்கள் இங்குதான் கட்டப்பட்டு ஆண்டவனுக்கு அக்கினி வாயிலாக உணவளிக்கப்படுகிறது.

ஸ்தம்ப மண்டபத்தில் ஆண்டவனின் வாகனங்கள்,பலிபீடம்,மற்றும் கொடி ஸ்தம்பம் இருக்கும். சபா மண்டபத்தில் - கலாசார நிகழ்ச்சிகள்,ஆன்மீக சொற்பொழிவுகள், மற்றும் ஆன்மீக சமூகநல வேலைகள் நடத்தப்படும்.

கல்யாணமண்டபத்தில்தான் உற்சவ காலங்களில் உற்சவமூர்த்திகள் அலங்காரம் செய்யப்பட்டு ஆராதிக்கப்படுகின்றன. கோபுரம் - பெரிய ஆலயங்களில் சின்ன கோபுரத்துடன் தோன்றும் நுழை வாயிலாக அமைந்திருக்கும். இந்த கோபுரம் மனித அமைப்பில் முழங்கால்களை ஒத்துள்ளன.

ராஜகோபுரம் எனப்படும் வெளிவாசல் பெரிய கோபுரத்துடன்,பெரிய நுழை வாயிலாக அமைந்திருக்கும். மனிதனின் பாதங்களும் விரல்களும் ஒப்பிடப்பட்டுள்ளன.

பிராகாரம் என்று சொல்லப்படும் கோயிலைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள இடத்தை மூன்று முறை வலம் வந்த பின்பு தான் உள்ளே கர்ப்பக்கிரகத்திற்குச் செல்ல வேண்டும் என்பது வழிபாட்டு முறையாகும். பாகசாலையில் (மடப்பள்ளி) அன்றாட நிவேதனங்கள் தயாராகின்றன. யாகசாலையில் யாகங்கள் நடைபெறுகின்றன.

அன்றாட வழிபாடு ஒவ்வொரு கோயிலிலும் மாறுபட்டு இருக்கும்.இருப்பினும், நிச்சயமாக ஒரு வேளையாகிலும் பூஜை நடந்து விடும்.

சாஸ்திரங்கள்படி ஒவ்வொரு கோயிலிலும் ஆறு காலமும் பூஜை நடக்க வேண்டும் என்று நியமிக்கப்பட்டாலும் மூன்று காலமாகிலும் நடப்பதுதான் முறையாகும்

அன்றாட வாழ்க்கையில் மனிதன் வழிபடும் முறைகளைத் தான் கோயிலில் ஆண்டவனுக்கும் நியமித்துள்ளார்கள்.

வாசனாதி திரவியங்களுடன் குளிப்பதை அபிஷேகம் என்றும்,திருமஞ்சனம் என்றும் அழைக்கின்றோம். தொடர்ந்து ஆண்டவனுக்கு அலங்காரம் நடைபெறும். விசேஷ காலங்களுக்கேற்ப அலங்காரங்கள் மாறுபடும்.

அலங்கரிக்கப்பட்டு ஆண்டவனுக்கு உணவிடுதலை தான் நிவேதனம் என்கின்றோம். நிவேதனத்தைத் தொடர்ந்து திபாராதனை நடைபெறும். மேள தாளத்துடனும் இன்னிசையுடனும் கூடி நடைபெறும். இச் சம்பவம் ஆண்டவன் வழிபாட்டில் மிகவும் முக்கியமாகக் கருதப்படுகிறது.அருள்பாலிக்கப்படுவதாகக் கருதப்படும் இந்த நிலையில் பக்தர்கள் தங்கள் கோரிக்கைகளை மனதால் ஆண்டவன் பாதங்களில் சமர்ப்பிக்கின்றனர்.

இதன் பின்னால் அர்ச்சனை செய்யப்படும். ஆண்டவனின் நாமங்களை உச்சரித்து புஷ்பங்கள் அல்லது குங்குமம் கடவுளின் பாதங்களில் சேர்க்கப்படுகிறது. கண்களை மூடி.கைகுவித்து செவிமடுத்து மனம் ஒடுங்கியிருக்கும் இந்த நிலை நீடித்து. மாயை ஒழிந்து ஞானம் பெற வேண்டும்.

'எத்தனை கோடி இன்பங்களைக் கொடுத்தருளுகிறான் இறைவன்! மாற்றாக அவனைத் துதி பாடினால் என்ன?' என்ற எண்ணத்தில் தான் ஸ்தோத்திரங்கள் பாடப்பட்டன.

பின்பு கடைசியாக.ஆண்டவனுக்கு நிவேதனம் செய்யப்பட்ட தின்பண்டங் களையும் அர்ச்சனை செய்த புஷ்பமும் குங்குமமும் பக்தர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

விபூதி பிரசாதம் – சாம்பலாகி விடும் மனித உடல் நிலையை நினைவுபடுத்தவே விபூதி அளிக்கப்பட்டு 'ஞானத்தைத் தேடு'என்று வலியுறுத்தப்படுகிறது.

சந்தனப்பொட்டினால் – குளிர்ந்த நிலையில் என்றும் இருந்து அஞ்ஞானங்களை ஒழித்திடும் தத்துவம்

குங்குமப் பொட்டினால் சர்வசக்தியும் நமக்குக் கிட்ட அருள்வேண்டி நிற்கின்றோம். பிரசாதம் அளிக்கப்படும் பொழுது கைகளுக்கிடையில் புடைவையின் முந்தானையோ அல்லது மேல் துண்டோ வைத்திருந்தால் நடைபாதையில் பிரசாதம் சிதறாமல் இருக்கும்.

மனநிறைவு பெற. குறைகள் யாவும் அகன்றிட. ஆலயம் செல்லும் மரபைக் கொண்ட நாம் நம்பிக்கையின் அடிப்படை -யில் தான் வாழ்ந்து வருகின்றோம்.

நம்பிக்கை வலுத்திட ஒரு சுமைதாங்கி.ஓர் ஊன்று கோல் .ஒரு பக்க பலம் தேவை. அதனால் நம்மைப்போல் ஒருவனை உருவாக்கி.அவனுக்கு தங்க ஓர் இடம் கொடுத்து. ஆயுதங்கள் பல கொடுத்து உண்ண உணவு கொடுத்து.விழாக் காலங்களில்அவனுடன் உற்சாகமாக ஆடிப் பாடிமகிழ்ந்து.அவனை நம்பி யிருக்கிறோம்.

தயிரில் நெய் இருப்பது தெரியும்.தயிராய் இருக்கும் போது நெய் கண்ணில் தெரிவதில்லை.ஆனால் நெய் கிடைத்திட தயிரைக் கடைகின்றோம். கிடைக்கும் வெண்ணெயை அனலில் இட்டு உருக்குகின்றோம்.அப்படித்தான் அருவா யிருக்கும் ஈசன் அருளுக்கு உருவம் அளித்து வழிபாடு செய்கின்றோம்.

இது தான் தெய்வ தரிசனம் – ஆலய வழிபாடு.

## ஆலயமும் நமது உடம்பின் ஆறு ஆதாரங்களும்...

**ஆலயத்தின் இந்த ஆறு பகுதிகள்,நமது உடம்பின் ஆறு ஆதாரங்களை உணர்த்துகின்றன.**

| | | | |
|---|---|---|---|
| 1. | கர்ப்பக்கிரகம் – மூலாதாரம் | 4. | ஸ்நான மண்டபம் – அனாகதம் |
| 2. | அர்த்தமண்டபம் – சுவாதிஷ்டானம் | 5. | அலங்காரமண்டபம் – விசுத்தி |
| 3. | மகாமண்டபம் – மணிபூரகம் | 6. | சபா மண்டபம் – ஆக்ஞை |

# நெற்றிச் சின்னங்கள்

திருநீறாக இருந்தாலும்,திருமண்ணாக இருந்தாலும் மூன்று கோடுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதே அதன் ஆழத்தை விவரிக்கப் போதுமானதாகும்.எந்த ஒரு பொருளை எடுத்துக் கொண்டாலும் அதை நுணுக்கி நுணுக்கிப் பிரித்துக் கொண்டே போனால், கடைசியில் அதை தனித்த மூன்று சக்தி உள்ள பொருளாகக் காணலாம். இப்படி உலகத்தின் பொருளை எல்லாம் நம்மவர்கள் ஆராய்ந்து வைத்துள்ளார்கள். அதற்குத் திரிபுடி ஞானம் என்று பெயர்.

தாலி கட்டும் போது மூன்று முடிச்சுப் போடுவதும், தியை வலம் வருதலும், கோயிலை வலம் வருதலும் மூன்று முறை நிகழ்கிறது.ஏலம் போடும் இடத்திலும் மூன்று முறைசொல்கிறார்கள்.நீதிமன்றத்தில் கூப்பிடும் போதும் அப்படியே செய்கிறார்கள். பெரியோர்கள் வாழ்த்தும் போதும்'வாழ்க! வாழ்க!வாழ்க!' என்று மூன்று முறை கூறுவார்கள்.

இதே அடிப்படையில் தான் மூன்று மூன்றாக எண்ணப்பட்ட எதையும் நினைத்துப் பார்க்க வேண்டும். நெற்றிச் சின்னமும் இப்படிப்பட்டதே.

மனித உடம்பில் சில 'மூன்றுகள்'உள்ளன. அதில் ஒரு வகை: நாடிகள் மூன்றாகும்.இவை மூன்றும் இல்லாமல் மனித உடம்பு வாழ முடியாது என்பது நம் ஞானிகளின் முடிவு.

நெற்றிக்கு இடுவதைத் தினப்படி செய்து வருவோர் அனுபவத்திலேயே இந்த நாடிக் கூறுகளை உணரலாம்.

இடது பக்கத்துக் கண், நாசி ஆகியவைகளைக் கொண்டது இடா நாடி. இப்படி வலது பக்கத்தில் உரிமை கொண்டது பிங்கள நாடி. உடம்பின் நடுவே செல்வது சுழுமுனை நாடி எனப்படும். இவை மூன்றும் ஆசன வாய்ப்பகுதி முதல் பின்னியபடியே இருந்து வருகின்றன. புருவ மத்தியில் இவை தனித் தனியே போய் தலையில் ஏறுகின்றன. பிறகு இவை கூடுவதில்லை

இதை இப்படியே காட்டுவதுதான் திருமண் இடும் பழக்கமாகும்.நடுவே சிவப்பு நிறமாக இருப்பது அக்கினி.அம்சமாகிய சுழுமுனை நாடியைக் குறிக்கிறது.பிற இரண்டும் பிங்கள, இடா என்னும் நாடிகளைக் குறிக்கின்றன. இதை 'இராமர் பாதம்' என்றும், 'பெருமாள் பாதம் ' என்றும் கூறுவர்.வைணவர்கள் திருமண் இட்டுக்கொள்வார்கள்.துளசிச் செடியின் அடியில் உள்ள மண்ணை இட்டுக் கொள்வது வழக்கம்.

மண்ணிலே பிறந்த நாம் மண்ணிலே தான் மடியப் போகிறோம். மண்ணிலே பிறந்த மரம் கடைசியில் மக்கி அதே மண்ணோடு மண்ணாகத் தானே ஆகிறது? நம்மை முடிவில் அடக்கிக் கொள்ளப் போவதும் அந்த மண்தான் என்ற தத்துவத்தை விளக்கவே திருமண் அணியப்படுகிறது.

சைவர்கள் விபூதியைத் தரிக்கிறார்கள். 'விறகுக்கட்டையை அக்கினியானது பஸ்பமாக்குவது போல், ஞானம் என்கிற அக்கினி எல்லாக் கருமங்களையும் பஸ்பமாக்குகிறது' என்று பகவத்கீதையில் கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். பஸ்பமாகிய விபூதி இவ்விதம் கர்மங்களை எரித்த பின் நிற்கும் ஞானத்துக்கே அடையாளமாகும்.

பல வர்ணங்களைக் கொண்ட பொருள்களைக் காண்கின்றோம்.ஆனால், இந்த வர்ணங்களெல்லாம் வஸ்துவை எரித்த பின் மாறி விடுகின்றன. எல்லாம் கடைசியில் வெளுத்துப் போய் விடும். நாம் 'சாயம் வெளுத்துப்போய் விட்டது' என்கின்றோம். சாயம் என்பது வேஷம்.வேஷம் போன பின் இருப்பதே மெய். மெய்யான ஆத்மாவின் தூய்மைக்குப் பெரிய அடையாளமாக இருப்பது விபூதி தான். இதை இந்தப் பொய்யான மெய் (தேகம்) முழுவதிலும் பூசிக் கொள்ள வேண்டும்.எல்லாம் எரிந்த பின் எஞ்சி நிற்பது விபூதியின் வெண்மை ஒன்றுதான்.மற்ற சாயமெல்லாம் பொய்.

திருநீற்றை இட்டுக் கொள்வது நமக்கு உயர்ந்த தத்துவத்தையே விளக்குகிறது. மன்னனும், மாசறக் கற்றோனும் பிடி சாம்பலாகி விடுகின்றனர்.நாம் கடைசியில் சாம்பலாகத்தான் போகின்றோம். இந்த வாழ்க்கை மாயமானது என்பதை விபூதி உணர்த்துகிறது. இங்கே விபூதியிடுவது என்பதும் தெய்வாம்சமானது என்பதும் தானாகவே தெரியும்.ஆயிரம் இதழ்த்தாமரை ஒன்று நம் தலைஉச்சியில் இருப்பதாக யோக நூல்கள் கூறுகின்றன. அது நெற்றிக்கு உச்சியில் இருந்து காதுப்பக்கத்தில் சரிகிறது.நெற்றி நடுவே புருவமத்தியும்.இன்னும் பல யோக சாதன ஆதாரங்களும் உள்ளன.ஆயிரம் இதழ் தாமரையும்.புருவ மத்தியும் இணையும் போது பெரிய சித்திகள் கிடைக்கும் .இதை நாள் தோறும் பழக்கப்படுத்துவதே திருநீறு இடும் பழக்கமாகும்.

குங்குமம் இடுவது புருவமத்தியை நினைவு செய்வதற்காகும்.இதுபெண்களுக்கு சிறப்பாகக் கூறப்பெற்றது. காரணம் மிகவும் சிறப்பானது ஆகும். புருவ மத்தியை அடிக்கடி நினைவுபடுத்துவது யோகம் செய்யும் பலனில் ஓர் அணு அளவு தரும். மேலும் இதை நினைத்தபடி இருக்கும் பெண்களை 'மெஸ்மரிஸம்', ஹிப்னாட்டிஸம்', செய்வது கடினம்.சில மந்திரவாதிகள் நெற்றியில் மையிட்டு நம்மை மயக்க முற்படுவதால் இதை அறியலாம்.

நாம் ஒவ்வொருவரும் குலாசாரத்தை அனுசரித்து திருநீற்றைறோ, திருமண்ணையோ, இடவேண்டும். திருநீறு.திருமண் இவற்றைத் தரிப்பது பரமாத்ம சொரூபத்தின் உண்மையையும், உலகில் உள்ள பொருள்களின் அநித்தியமான நிலையையும் நினைவூட்டுகின்றது.

❖ ❖ ❖ ❖ ❖

## காயத்ரீ மந்திரம்

வேதங்களில் "ச மனோந்திரா" என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது காயத்ரீ மந்திரம். அது எல்லோருக்கும் பொதுவான மந்திரம். நான்கு வேதங்களின் சாராம்சம் உபநிடதமாகக் கிடைத்திருக்கிறது. காயத்ரீயும்,அதன் மூன்று வியாகிருதிகளும் உபநிடதங்களின் சாராம்சமாக நமக்குக் கிடைத்திருக்கிறது.

காயத்ரீ மந்திரம் வேதங்களுக்குத் தாய் போன்றது. அதைக்காட்டிலும் நம்மைத் தூய்மைப் படுத்தக் கூடிய மந்திரம் வேறு இல்லை. தூய்மையான உள்ளத்துடனும், சிரத்தையுடனும் காயத்ரீயைச் சொல்லும் போது ,அது நமக்கு மிக உயர்ந்த பலனை அளிக்கிறது. காயத்திரீ தேவி, சக்தியை அளிக்கும் உமாதேவியையும்,செல்வத்தை அளிக்கும் லட்சுமி தேவியையும் அறிவைத் தரும் சரஸ்வதி தேவியையும் ஒன்றாகக் கொண்டு உருவானவள். அதனால் காயத்ரீ மந்திரத்தைச் சொல்லுபவர்களுக்கு, சக்தி- செல்வம் - அறிவு மூன்றுமே பெருகும்.

காலை வேளையில் நீராடி விட்டு சூரியனைப் பார்த்தபடி நின்று கொண்டு, மனத்தை ஒருமுகப்படுத்தி காயத்ரீ மந்திரத்தைச் சொன்னால் மூளை விருத்தியாகும். ஞாபகசக்தி பெருகும்.

இவ்வளவு சீரிய பலன்களைத் தரும் காயத்ரீ மந்திரம் ஒளியையும் அக்கினியையும், தேக்கிக் கொண்டிருப்பது அதை உள்ளத் தூய்மையும் உடல் தூய்மையும் கொண்டவர்கள் தான் சொல்ல வேண்டும்.

# நடராஜத் திருவடிவம்



### அற்புத சிற்பக் கலை வடிவம்

உலகத்திலேயே மிகவும் அற்புதமான ஒரு கலை நுணுக்க சிலை எனக் கருதப்படும் நடராஜர் திருவடிவம் பல வகையிலும் ஆன்மீகச் சிறப்பு பெற்றுத் திகழ்கின்றது. நடராஜர் திருஉருவம் இடம் பெறாத சிவன் ஆலயமே இல்லை எனலாம். சிலப்பதிகாரம், கலித்தொகை போன்ற பண்டைய தமிழ் இலக்கியங்களில் எல்லாம் நடராஜர் திருஉருவச் சிறப்பு பற்றிக் கூறப்பட்டுள்ளது.

### நடராஜர் திரு உருவம் தத்துவச் சிறப்பு

சைவ சமயத்தின் தத்துவ கருத்தின் தொகுப்பாகவே நடராஜர் சிலை அமைந் திருக்கிறது. அதன் ஒவ்வொரு சிறு அம்சத்திலும் சமயம் தழுவிய பல சிறப்புகளைக் காண முடிகின்றது.

### நடராஜர் திருமுகம்

பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் எல்லையற்ற அழகு சேர்ந்த கருணை வடிவமாக நடராஜப்பெருமான் திருமுகம் திகழ்கின்றது. சாந்தமும், மலர்ச்சியும், தவழும அந்தத் திருமுகம் இறைவனின் கருணை உள்ளத்துக்கான விளக்கமாக அமைந்துள்ளது.

### பனித்த சடை

நடராஜர் பெருமானின் சடைமுடி ஞானச் சிறப்பையும், சிவ நெறிக்குறிய தவ ஒழுக்கச் சிறப்பையும் குறிக்கின்றது

### கங்கை தாங்கிய திருமுடி

பரமனின் பேராற்றலுக்கான விளக்கமாக இது அமைந்திருக்கிறது.

### பிறை அணிந்த பெம்மான்

தம்மைச் சரணடைந்தவர்களை அர வணைத்து அவர் தம் துயர் நீக்கும் இயல்பினுக்கு நடராஜப் பெருமானின் முடியில் காட்சித் தரும் பிறை ஒரு சான்றாக உள்ளது.

### வளைந்த புருவங்கள்

பார்வையைக் கூர்மையாக்கி உற்றுக் கவனிக்கும் போது புருவம் தானாக வளைந்து கொடுப்பது இயல்பு. தமது அடியார்களின் துயரங்களை தெளிவாக உணர்ந்துகொள்ள பரமன் கூரிய பார்வையை உயிரினங்கள் மீது ஓட்டும் தன்மைக்குப் பெருமானின் வளைந்த புருவங்கள் சான்று ஆகும்.

### குமிண் சிரிப்பு

நடராஜப் பெருமானின் உதடுகளில் தவழும் இனிய குறுநகை, தம்மை அண்டியவர்கள் செய்த பாவங்களை மன்னித்து அவர்களுக்கு அருள் பாலிக்கும் கருணையின் சின்னமாகும்.

### பவளத் திருமேனி

பெருமானின் சிவந்த பவளம் போன்ற திருமேனி தீப்பிழம்புக்குச் சமமானதாகும். தீயானது தம்பால் வந்து சேரும் பொருட்

களில் உள்ள மாசினை எரித்து அகற்றி தூய்மைப்படுத்தும். அதுபோன்று தம்மை அண்டித் தம்முடன் இரண்டறக் கலக்கும் ஆன்மாக்களின் வல்வினை என்ற அழுக்கைப் பரமன் சுட்டெரித்து ஆன்மா க்களைப் பரிசுத்தப் படுத்துகிறார் என்பது அதன் உள்ளார்ந்த பொருளாகும்.

### நீலகண்டம்

ஆன்மாக்களின் கா்ம வினைகள், தவறுகள் ,குற்றங்களைத் தமது கருணை உள்ளத் தினால் களைந்து அகற்றி அவற்றை தமது வசம் இழுத்து, உயிர்களைக் கடைத் தேற்றும் தத்துவம் பரமனின் நீலகண்டமாகும்.

### உடுக்கை

பரமனின் கரத்திலிருந்து ஒலிக்கும் தமருகம் எனப்படும் உடுக்கையின் நாதம் அணித்திரள்களைத் திரட்டி உலகத்தை, உலகம் சார்ந்த பொருட்களை படைக்கும் தத்துவத்தின் அடையாளமாகும்.

### நெருப்பு

நடராஜன் இடக்கை ஒன்றில் காணப்படும் நெருப்பு பரமனின் அழித்தல் தொழிலின் சின்னமாகும்.

### அபயகரம்

நடராஜப் பெருமானின் அமைந்த கரத்தை அபயகரம் என்று கூறுவர். எதற்கும் அஞ்சற்க. நாம் என்றும் துணையிருப்போம் என்று உயிர்களுக்கு இறைவன் அளிக்கும் உறுதிமொழியின் அடையாளம் அது.

### இடது திருவடி

எடுத்த திருவடியாக காட்சிதரும் இடது திருவடி பரமனின் மறுகூறான அம்மைக்கு உரியதாகும். நம்மை ஆட்கொள்ள வரும் திருப்பாதம் என அப்பர் பெருமானின் வா்ணனையே இதற்கான அர்த்தமாகும்

### ஊன்றிய திருவடி

நடராஜரின் ஊன்றிய திருவடி பரமனின் ஆண்கூறுக்கு உரியதாகும். அந்தத் திருவடி முயலகன் மீது ஊன்றிய நிலையில் உள்ளது. முயலகனை மிதித்து நின்றாலும் ஒரேயடியாக அவனை நசுக்கி அழித்து விடாமல் மென்மையாக பாதத்தை வைத் திருக்கும் பான்மையிலும் ஓர் அர்த்தமுண்டு. முயலகன் ஆன்மாக்களை அலைக்கழிக்கும் மும்மலங்களைக் குறிக்கும் அடையாளம் என்பர். மும்மலங்களை விலக்கியருளும் பணியினைச் செய்யும் இறைவன், அந்த பணியில் ஆன்மாக்களுக்கு ஒரு சிறு ஊறும் விளைவிக்காத நிலையில் தன் பணியினை ஆற்றுகிறான் என்பது தத்துவம்.

### தெற்கு நோக்கிய பார்வை

நடராஜப் பெருமானின் திருஉருவம் எந்தத் தலத்திலும் தெற்கு நோக்கியே அமைந்திருப்பதைக் காணலாம். தென் திசை எமனின் திசையாகும். தம்மை நம்பி அண்டிய யாரையும் தென் திசைக்கு அதிபதியாம், எமனின் அச்சத்திலிருந்து அவர் காத்தரு ளுவார் என்பதே அதன் பொருளாகும்

### பெருவியப்பளிக்கும் சின்னம்

"நடராஜ வடிவத்தினை வருங்காலத்தில் இதன் பழைய சிறப்புடன் எந்த ஒரு கலைஞனாலும் சமைத்தளிக்க முடியுமா என்பது ஐயப்பாடே! இத்திருஉருவம் பக்தர்களுக்கும் பாமரர்களுக்கும் மட்டுமன்றி விஞ்ஞானிகளுக்கும் மெய்ஞ்ஞானிகளுக்கும் கூட பெருவியப்பையும் பெரும் ஈடுபாட்டையும் தோற்றுவித்து வருகின்றது." என உலகப் புகழ் பெற்ற பேறறிஞர் ஆனந்த குமார சுவாமி கூறியிருக்கிறார். நடராஜ பெருமான் திரு உருவத்தை வழிபடுவதன் மூலம் முழுமை யாக தெய்வ வழிபாட்டைச் சற்றும் குறையிலாது நிறைவேற்றுவதாக அமையும்.

# பிரார்த்தனை

காலையிலும் மாலையிலும் ஒரு சில நிமிஷங்கள் செய்யும் பிரார்த்தனை அந்த நாளில் மற்ற நேரங்களை மிக்க சிறப்பாகவும், மிக்க பயனுடையதாகவும் ஆக்கிவிடுகிறது. ஒரு சிறு தொழில், அதனால் பெரிய பலன். இந்த அரிய ஏற்பாட்டை இயற்கையின் சக்திதான் செய்ய முடியும்!

பக்தி நெறி வயப்பட்டவர்களுக்கு ஏற்படுகிற முதல் அனுகூலமே மனப்பக்குவம் தான். பக்குவமான நிலத்தில் மட்டுமே பயிர் முளைத்து வளரும். பக்குவமடைவதற்கு வாய்ப்பான மனதிலேதான் பக்தி என்ற பயிர் முளைத்து செழிக்க முடியும். மற்றும் தெய்வ நம்பிக்கை என்பது மனம் பக்குவம் அடைவதற்கான தொடர் நிலை இந்த நம்பிக்கை தீவிரமடைந்து உறுதியடைந்து "பக்தி" என்ற நிலைக்கு உயர்வு பெறும்போது மனம் தானாகவே பக்குவமடையத் தொடங்கி வடுகிறது. இப்பேர்பட்ட மனத்தில பிரார்த்தனை எளிதில் கூடும்.

எல்லாம் வல்ல இறைவனுடைய திருவடியில் சரணமடைய வேண்டும் என்ற அவாவுக்கு ஆட்பட்ட ஒவ்வொருவரும் தம்முடைய அலை பாயும் மனத்தைப் பக்குவப்படுத்தும் வரத்தை அருளுமாறுதான் முதல் பிரார்த்தனையை--வேண்டுகோளை சமர்ப்பிக்கின்றனர்.

நமது உடல் ஆத்மா தங்கியிருக்கும் அற்புதமான கோயில். வெகு சிலரே உடலின் மேன்மையை அறிந்து அதை கண்ணியத் துடனும் மரியாதையுடனும் நடத்துகின்றனர். சிவரக்கண்காணிக்காத உடல் நாளடைவில் அதன் பலனை தோற்றுவிக்கிறது. எதைப் போற்றுகிறோமோ அது வளரும். எதைத் தூற்றுகிறோமோ உதாசீனம் செய்கிறோமோ அது தாழும். இது உலக உண்மை.

போற்றுகிற உடலில் புனிதம் நிறைந்திருக்கும். புனிதத்திலிருந்து மேலான பிரார்த்தனை உயிர்பெறும், அதற்கான பலனும் உடனே கிடைக்கும்.

வாழ்வு ஒரு நீரோட்டமல்ல. அது ஓர் எதிர்நீச்சல். வாழ்வு ஒரு போராட்டம். வாழ்வு ஒரு துடிப்பு, அத்துடிப்புக்கு ஏற்றபடி செயல்புரிந்தால் நல்ல பலன்களை பெறலாம். நம்மை நாம் அறிந்து கொள்ளாமல் வாழ் கிறோம். நமக்குள்ளே வலிமை இருக்கிறது, சக்தி இருக்கின்றது. நாம் அதை அறிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

பார்க்கப்போனால் உடல் பயிற்சி போன்றதுதான் மனப்பயிற்சியும். முதலில் இடக்கு செய்யவே செய்யும். ஆரம்பத்தில் உடற்பயிற்சியில் கை கால் வலிக்கிற தில்லையா, ஆனால் போகப் போக அது சரியாகிவிடும். தியானத்திலும், பிரார்த்தனை யிலும் உறுதியுடன் இருந்து தியான வழியில் பிரார்த்தனையில் ஈடுபட்டால் மெல்ல மெல்ல மனம் ஒருமை படத் தொடங்கிவிடும். அதன் பிறகு அப்படிப் பிரார்த்தனையில் இருப்பது ஒரு சுகமான அனுபவம் ஆகிவிடும்.

உயிர்களை நேசிப்பதே உண்மையான பிரார்த்தனை. இப்படி நேசிப்பதால் உள்ள த்தில் தூய்மை ஏற்படுகிறது.

அப்படி அழுக்கில்லாத மனம் படைத்தவனே உயரிய பிரார்த்தனைக்கு உரிமையுடையவனாய் ஆகிறான்.

இறைவன் மனிதனுக்கு நல்ல உடல் உறுப்புக்களை கொடுத்திருக்கிறான். அறிவை யும் கொடுத்திருக்கிறான். இருந்தும் வாழ்வில் ஏற்படும் இடையூறுகளைச் சந்திக்கும் பொழுது, அவனுக்கு சோர்வும் உற்சாகக் குறைவும் ஏற்படுகின்றது. அப்பொழுது அவன் என்ன செய்வான்? அந்த அவல நிலையில் அவன் தன்னம்பிக்கை பெற்று, வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்நோக்க அவனுக்கு

துணையிருப்பது பிரார்த்தனைதான். பிரார்த்தனை என்பது இறைவனிடம் கேட்பது மட்டுமல்ல. ஏற்கனவே இறைவன் நமக்கு அளித்துள்ள ஆற்றலை மேலும் வலிவு படைத்ததாக ஆக்கிக் கொள்வதுமாகும்

பிரார்த்தனை என்பது அக்கறையோடு ஈடுபடுவதாகும். அது ஆத்மாவின் முறையீடு. உணர்வுபூர்வமாக இறைவனுடன் நம்மை இணைத்துக் கொள்வதற்குப் பிரார்த்தனை ஒரு வழியாக அமைகிறது. எதை முன்னிலையில் கொள்கிறோமோ அதனை நோக்கி இதய பூர்வமாகப் பிரார்த்தனை செய்தால் விரும்பிய பயன் கிடைக்கவே செய்கிறது. நமது தேவைக்கும் மனநிலைக்கும் ஏற்ப இறைவனை நாமாகவே கற்பனை செய்து கொள்கிறோம். இறை என்னும் சக்தியோடு எவ்வாறு பயன் தரத்தக்க வகையில் நாம் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்பதுதான் முக்கியம்.

நம் உயிரின் இயக்கம் என்பது சிறிய ஆற்றலின் செயல் பாடு என்றால், பிரபஞ்ச இயக்கம் என்பது பெரிய ஆற்றலின் செயல்பாடாகும். சிறிய இயக்கத்திலிருந்து பெரிய இயக்கம் வரை ஒன்றோடொன்று தொடர்புகொண்டவைகளாகவே இருக்கின்றன. நாம் பிரார்த்தனையில் ஆழ்ந்து ஈடுபடும் போது நம்முடைய ஆற்றலை, பிரபஞ்சம் முழுவதும் நீக்கமற நிறைந்திருக்கும் பேராற்றலோடு இணைத்துக் கொள்கிறோம்.

இதுவே நம்முடைய சக்தியை பெருக்கிக் கொள்ள நமக்குத் துணையிருக்கிறது., எண்ணங்கள் தான் சக்தி.

மனம் என்னும் அடங்காக் குதிரைக்கு, அறிவெனும் கடிவாளத்தைப் பூட்டி அடக்க வேண்டும். அப்பொழுது தான் அதை ஒரு கட்டுப்பாட்டில் கொண்டு வரமுடியும். மனமும் பக்குவ நிலையை அடையும். இந்த சங்கடம் எப்பொழுதுமே இராது. பிரார்த்தனைப் பயிற்சியினால் நாளடைவில் மன சஞ்சலம் குறைந்து போகும்.

அதன் பிறகு சீக்கிரத்தில் மனம் பிரார்த்தனையில் ஒன்றிப்போகும். அறிவு திரண்டு ஒருமுனைப்படும்போது ஜீவ ஒளியைக் காணவியலுகிறது.

ஜீவ ஒளியைக் கொண்டே பிரம்ம ஒளியைக் காண இயலும். இந்த நிலைக்கு அருளே ஆதாரம். இதுவே மனம் பரி பக்குவம் அடைந்த நிலையாகும்.

மனத்தை பயன்படுத்துவதன் மூலம் இவ்வுலகில் ஓர் அற்புதமான நாம் விரும்பும் வாழ்க்கையை வாழலாம். நாம் ஒளி மிகுந்த எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள முடியும்.

நமது சிந்தனையும் செயலும்தான் நமது விதியை நிர்ணயிக்கின்றன. எதிர் காலத்தைச் செப்பனிட்டுத் தருகின்றன. நமது இன்ப துன்பங்களைச் சமனப்படுத்துகின்றன.

நம்மால் செய்யக்கூடிய அளவுக்குச் செய்தபின், ஒன்றும் செய்ய இயலாதபோது- அதற்கான வழிதெரியாதபோது - ஒருவித தயக்கம் ஏற்படும்போது - பிரச்சனையை இறைவனிடம் ஒப்புவிப்பது, பிரார்த்தனை ஆகும். உடனே நல்ல பலனும் கிடைக்கும்.

வேகமாகப் பம்பரம் சுழலும் போது அது அப்படியே நிற்பது போலத் தோன்றும். அதுபோலவே நம் எண்ணங்கள் வேகப்படும் போது மனம் ஒரு நிலைக்கு வந்து விடுகிறது.

பிரார்த்தனையின் போது மனம் ஒருமைபட்ட நிலையில் உலகில் பேராற்றலோடு நாம் ஒன்றிக்கலந்து போகிறோம். காந்தத்தோடு இணையும் இரும்பு காந்த சக்தியை பெறுவது போன்ற நிலை நமக்கு ஏற்பட்டு விடுகிறது. இதுவே பிரார்த்தனையின் போது நமக்கு கிடைக்கும் மாபெரும் பலம் ஆகும். இந்த ஆன்மீக பலம் வாழ்க்கையில் நாம் வேண்டியவற்றையெல்லாம் கொடுக்கிறது. முயற்சி, விடா முயற்சியாகவும் விரும்பிய பலனைக் கொடுக்கவும் பிரார்த்தனை துணை நிற்கிறது. இதயத்தின் ஆழத்திலிருந்து

நம்பிக்கையோடு பிரார்த்தனை வெளிவர வேண்டும். கேட்டதைபெற அதுவே சரியான வழியாகும். பிரார்த்தனைக்கு முழுமையான பலன் கிடைக்க வேண்டுமானால், இதயம் ஒன்றி எண்ணங்களை ஒருமுகப்படுத்தி இறைவனிடத்தில் செலுத்த வேண்டும்.

பிரார்த்தனை செய்து விட்டு, முயற்சி யையும் மேற்கொள்ள வேண்டும். அதற்கான வழிவகையை அவசியம் கொடுக்கும் பிரார்த்தனை. சோம்பேறியாக இருந்து கொண்டு பிரார்த்தனை மட்டும் செய்து வந்தால் ஒரு பலனும் கிட்டாது.

பிரார்த்தனையின் பொழுது நாம் புதிய பலத்தை பெறுகிறோம். இந்தப் பலமும் நம்பிக்கையும். முயற்சி வெற்றியடையத் துணையிருக்கின்றன.

பிரார்த்தனையினால் மனதில் நம்பிக்கை ஏற்படுகிறது என்றோம். இதன் விளைவாக எடுத்த காரியத்தில் வெற்றி நிச்சயம் கிடைக்கப் போகிறது என்ற மன உறுதி ஏற்படுகிறது. அதனால் காரியம் நிறை வேறுகிறது.

பிரார்த்தனையினால் எப்படியும் இறைவன் துணையிருப்பான் எனும் நம்பிக்கை, வெற்றியை நிச்சயப்படுத்திவிடுகிறது.

நம்பிக்கை இல்லாமல் பிரார்த்தனை யில் அமர்ந்தவன் நம்பிக்கையோடு எழுந்தி ருக்கிறான். இதுவே வெற்றிக்கு தீர்வாகிறது, பிரார்த்தனை என்பது உரிமையுடன் கேட்ப தாகும். தன்னம்பிக்கை உள்ளவன் எதையும் யாசிக்க மாட்டான். பிரார்த்தனையினால் தன்னம்பிக்கை எளிதில் ஏற்பட்டுவிடும்.

நாள்தோறும் ஒரே எண்ணத்தை திரும்ப திரும்ப எண்ணி வழிபடும் பொழுது, அது ஆழ்மனப்படிவுகளாகிப் பலம் பெற்று, தேவைப்படும் பொழுது, பிரச்சினைக்கு தீர்வு காணும் வழியையும் நமக்குச் சொல்லி கொடுக்கிறது. செயல்படதூண்டும் சக்தி, சேமிக்கும் உபாயமாக விளங்குகிறது.

இடைவிடாத பிரார்த்தனையின் மூலம் நாம் எதையும் எளிதில் சாதித்து கொள்ள முடியும். எனவே அவசியம் பிரார்த்தனை செய்ய நீங்கள் பழகிக் கொள்ள வேண்டும்.

அதுவே வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்து, உங்கள் முன்னேற்றத்திற்கு-வெற்றிக்கு வழிகாட்டும் ஒளி விளக்காகவும் இருக்கும்.

***வாழ்க்கையில் வெற்றி பெற, முன்னேறத் துடிக்கும் நாம், உலகம் ஒரு நியாயத்திற்குக் கட்டுப்பட்டு இயங்கி வருவதை உணர வேண்டும். உலக இயக்கம் தலைவிரித்தாடும் பேயாட்டம் அல்லது ராக தாள பாவத்துடன் இயங்கும் ஓர் இன்னிசை நடனமாகும். விதையில் இருந்து தான் செடி உண்டாகின்றது. ஓர் எண்ணத்திலிருந்துதான் செயல் பிறக்கிறது.*** இந்த முறையில்தான் பிரார்த் தனையிலிருந்து அற்புதங்கள் பிறக்கின்றன.

***நீங்கள் வாழ்வில் நன்மை பெற விரும்பினால் நன்மை பற்றியே சிந்தியுங்கள், நல்ல விஷயங்கள் பற்றியே சிந்தியுங்கள். எந்த எண்ணமும் அதற்கு ஏற்ற எண்ணங் களையே ஈர்க்கும் என்பது இயற்கையின் நியதியாகும்.***

விஞ்ஞானமே இப்போது வெகு தீவிரமாக, ஞான மார்க்கத்தில் இறங்கி யிருக்கிறது.

நம்மை நாமே அறிந்து கொள்ளும் முயற்சியில் மனம் செயல்படும் விதங்களை, மனத்தின் இயல்பினை அறியும் முயற்சியில் மேனாட்டு விஞ்ஞானம் இறங்கியிருக்கிறது.

ஒரு நொடியில் ஒருவர்க்கொருவர் அழித்துக்கொள்ள அணுகுண்டு கண்டு பிடிக்கிறார்கள். இப்பொழுது நாம் ஒருவர்க் கொருவர் ஒரே காலத்தில் மாண்டுபோவதில் என்ன பயன்? வேண்டாமே அணுகுண்டு என்கிறார்கள்!

பிரார்த்தனை என்பதே ஒரு நல்ல காரியம். அதிலிருந்து நல்லது மட்டுமே பிறக்கும்.

# வாழ்ந்து பார்க்கலாம் வாருங்கள்!

## நேரமிருக்கிறதா ? நேரம் !!



### *திட்டமிடல்*

உங்களது நாளை அவசியம் திட்டமிட வேண்டும் அப்படிச் செய்யாவிடில் உங்கள் மேஜையின் மேல் வேலை குவியத் தொடங்கும். மேஜை மேலிருக்கும் ஒவ்வொரு வேலைக்கும் நேரத்தை பிரித்து கொடுங்கள். இதன் மூலம் வாய்ப்புகளில் நேரத்தைச் செலவிடுவதைக் காட்டிலும் பிரச்சனைகளிலே அதிக அளவில் நேரம் செலவாகும் மாபெரும் தவறை நீங்கள் தவிர்க்கலாம். ஒவ்வொரு நாளையும், நீண்ட நாளைய இலக்குகள் உள்ளிட்ட இரண்டு அல்லது மூன்று பெரும் விஷயங்களுடன் கூடிய கால அட்டவணையுடன் துவங்குங்கள். ஒரு திட்டத்தை திட்டமிடுவதில் செலவிடும் நேரத்தைக் காட்டிலும் அதைப் பற்றி ஆலோசனை செய்யும் நேரம் குறைவே இன்றைய வேலைப் பளுவை திட்டமிடும் நேரத்தின் மூலம் வெளிவிட்டுவிடாதீர்கள்.

### *ஒருமுனைப்படுத்துதல்*

காலத்தைச் சரியானபடி நிர்வகிப்பதில் முக்கிய பங்கு மனதை குறிப்பிட்ட வேலையில் ஒருமுனைப்படுத்துவதில் உள்ளது. நிர்வாக கஷ்டங்கள் உள்ளவர்கள் பெரும்பாலும் ஒரே சமயத்தில் பல காரியங்களை செய்ய முனைவார்கள். ஒரு திட்டத்தின் மேல் மொத்தமாக செலவிடும் நேரத்தைக் கணக்கிடுகையில் உண்மையில் செலவிடும் நேரம் தடங்களில்லாமல் உபயோகப் படும் நேரமே சில பிரச்சனைகள் முழு மூச்சுடன் அதில் ஈடுபடுவதை தடுக்கும் விதத்தில் அமைகின்றன. சில கொஞ்சம் கொஞ்சமாகவே தீர்க்கப்படுவதாக அமைகின்றன.

### *இடைவேளை*

நீண்ட காலங்கள் வேலை பார்க்கும் போது இடை வேளை இல்லாதிருந்தால் சக்தி குறைகின்றது., சலிப்பு வருகிறது, உடலில் அழுத்தம் மற்றும் இறுக்கம் சேர்கின்றது. சில நிமிடங்கள் சுவாசப் பயிற்சிகள், அலுவலகத்தைச் சுற்றி நடை, உட்கார்ந்த நிலையிலிருந்து சற்று நேரம் எழுந்து நிற்பது இவற்றால் உங்களுக்குத் தெளிவு ஏற்படலாம். களைப்பாறுதல் உங்களது திறமையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல் உங்களது உடலின் இறுக்கத்தைக் குறைப்பதனால் உங்கள் உடல் நலம் பாதுகாக்கப்படுகிறது. உங்கள் உடல் நலத்திற்கு உதவும் எதுவுமே நேரத்தை காப்பதற்குப் பயன்படுகிறது.

### குழப்பத்தைத் தவிர்த்தல்

எப்படிப் பார்த்தாலும் குழப்பம் ஒரு முனைப்படுத்தலை தடை செய்கிறது. இறுக்கத்தையும் மெய்மறந்து ஈடுபட்டிருப்பது போன்ற ஏமாற்றத்தையும் உருவாக்குகிறது.

உங்களது மேஜை தாறுமாறாக ஒழுங்கற்று இருப்பின், அதை மாற்றி அமைப்பதற்கு நேரத்தைச் செலவிடுங்கள். எல்லாவகையான பேப்பர்களையும் ஆராய்ந்து 1. உடனடியாக முடிவு எடுக்க வேணடியது, 2.. குறைந்த அளவு முதன்மை அளிக்க வேணடியவை 3. பூர்த்தியாகாதவை. 4. படிக்க வேண்டியவை என பிரித்தெடுங்கள். முக்கியமான விசயத்தை மேசையின் நடுவில் வைத்துக் கொள்ளுங்கள். மீத முள்ளவற்றை பார்வையிலிருந்து அகற்றுங் கள். நீங்கள் ஒரேயொரு விஷயத்தை மட்டும் ஒரே சமயத்தில் நினைத்து, அதில் மட்டும் அதே சமயத்தில் கவனம் செலுத்துகிறீர்கள் என்பதை மறவாமல், முக்கியமான விடயத்தில கவனம் செலுத்துங்கள், முடிவாக ஒவ்வொரு மாலையிலும் மேஜையை முழுவதுமாக காலி செய்யுங்கள். அல்லது ஒழுங்காக அமையுங்கள். இது அடுத்த நாளைய துவக் கத்திற்குப் பெரிதும் உதவும்.

### தள்ளிப் போடாதீர்கள்

ஆழமாய் வேரூன்றிய பழங்கங்களில் ஒன்று தள்ளி போடுதல். சரியான முறையை பயன்படுத்துவதன் மூலம் இதை மாற்றி அமைக்கலாம். அமெரிக்காவின் "மனோதத்துவ தந்தை" என அழைக்கப்படும் வில்லியம் ஜேம்ஸ் தமது "மனநூலின் விதிகள்" என்ற நூலில் இதற்கு ஒரு முறையைக் குறிப்பிட்டி ருக்கிறார்.

1. உடனடியாக முதல் அடியை எடுப்பது மிகவும் முக்கியம், 2. வேகமாய் அதிகம் செய்வதற்கு முயற்சி செய்யாதீர்கள். ஒரு காரியத்தை மட்டும் தற்போது செய்வதற்கு உங்களைக் கட்டாயப்படுத்துங்கள், ஒவ் வொரு நாளையும் வெறுப்புண்டாக்குகிற விஷயத்துடன் துவங்குங்கள் தவணை கடந்த மன்னிப்பு வேண்டுதல், சக தொழி லாளியை ஒப்பிடல், நீங்கள் சமாளிக்கு் ம் சதா தொந்தரவு கொடுக்கும் குடும்பக் கடமை இது போன்ற ஒரு சிறு விஷயமாகவும் அது இருக்கலாம். எதுவாக இருந்த போதிலும், எப்போதும் செய்யக்கூடிய காலை நேர வேலைக்கு முன் அதைத் தொடங்குங்கள். இந்த முறை அந்த நாளுக்குரிய சீரிய மனோநிலையை அளிக்கும். ஒரு நாளில் இதற்கு 15 நிமிட நேரமே இருந்த போதிலும், நீங்கள் பூர்த்தி செய்த சந்தோஷமற்ற விஷயத்தினால் நாள் முழுவதும் செய்ய வேண்டிய சந்தோஷ உணர்ச்சியைப் பெறுவீர்கள்.

இதில் ஓர் எச்சரிக்கை. விதிவிலக்கு களை மறுப்புகளை அனுமதிக்காதீர்கள் வில்லியம் ஜேம்ஸ் இதை நூல் சுற்றுவதற்கு ஒப்பிடுகிறார். ஒரு சிறிய தவறும் மீண்டும் பல சுற்றுகள் சுற்ற வேண்டியதாகிவிடும். முதலில் ஒவ்வொரு நாளும் பல நிமிடங்கள் கஷ்டங்களை சகிக்கக்கூடிய கடினத்துடன் இருந்து வந்தால் அடுத்த இரண்டு வாரங் களில் நீங்கள் கட்டாயம் கால விரயத்தைத் தடுப்பதற்கான பயிற்சியில் தேறியிருப்பீர்கள்.

### பூரண சிகிச்சை

கால விரய செயல்கள் புற்று நோயை-போன்றவை. அவைகள் உற்சாகத்தை வடி கட்டி அதையே வளரச் செய்கிறது. இதற் கான சிகிச்சை பூரண இரண சிகிச்சையாகும். உங்களைச் சலிப்படைய செய்யும் காரி யங்களில் உங்களுடைய நேரத்தை வீணா க்குவீர்களானால், அது உங்களை உண்மை யான குறிக்கோளில் இருந்து மாற்றி விடுவதோடு மட்டுமல்லாமல் உங்களுடைய சக்தியையே கழித்து விடும். அவைகளை முடிவாக நீக்கி விடுங்கள். உங்கள்

வேலையோடு தொடர்புடைய சொந்த பழக்கவழக்கங்கள் வழக்கமான வேலை முறைகள் இவைகளுக்கும் இந்த விதி பொருந்தும். உங்கள் நியமன கலண்டர் சாதாரண பாடத்திட்டங்களுக்குப் புறம்பான விளையாட்டுகள், மன்றம் போன்ற செயல்கள், படிக்கும் நூல்களின் வரிசை, டீவியில் பார்க்கும் விசயங்கள் முதலியவற்றில் சரியாயிருங்கள். உங்களுக்கு திருப்தியைத் தராத விஷயங்கள் ஒவ்வொன்றையும் நீக்கி விடுங்கள்.

நீங்கள் ஒவ்வொருவரும் பொதுச்சபையை சேர்ந்தவராகவோ அல்லது தேசியத் தலைவராகவோ ஆகப் போவதில்லை. அதிகாரத்தை மாற்றிக் கொடுக்காத பெற்றோர்கள் தங்களுக்கும் தங்கள் குழந்தைகளுக்கும் கெடுதியையே செய்கிறார்கள். ஒரு எச்சரிக்கை நீங்களோ, அல்லது மற்றவரோ விரும்பாத கீழான வேலைகளை மற்றவரிடம் ஒப்படைப்பது பிரதிநிதித்துவம் ஆகாது. அது பங்கு ஒதுக்குதல் என்பதாகிவிடும். சவால் விடும் மற்றும் பரீட்சை கொடுக்கும் கடமைகளை மாற்றிக் கொடுப்பதற்கு கற்றுக்கொள்ளுங்கள். திறமை மிக்க தேவையான முடிவுகளை உருவாக்குவதற்கு, உங்களுடைய நேரத்தை சேமிக்க அது உதவும்.

கடந்த காலம் மீட்க முடியாதது வருங்காலம் என்பது ஒரு மனத்-தோற்றமே. பிரிட்டனின் கலை விமரிசகர் ஜான் ரங்கின் தன்னுடைய மேஜையில் 'டு டே' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சலவைக் கல்லொன்றை வைத்திருப்பாராம். இப்போதே செய என்று அதற்கு அர்த்தமாம். அதைவிட கீழ்கண்ட வாசகம் மிகவும் உபயகரமான ஒன்று.

***'நேற்று என்பது ஒரு ரத்து செய்யப்பட்ட காசோலை***
***நாளை என்பது ஒரு கடன் பத்திரம்***
***இன்று என்பது நேரிடையான பணம்'.***

அதை உபயோகியுங்கள்

## திட்டமிட்ட கணக்கு !

நாம் விதிவழியே அனுபவிக்க வேண்டிய வற்றை பிராரப்தகர்மா ஒட்டியே, இறைவன் நமது வாழ்க்கையை நிர்ணயிக்கிறான். இது அமைவது நமது முந்தைய பிறவியில் செய்த நன்மை, தீமைகளைப் பொறுத்தது. இதை மீறி எதுவும் நடப்பதில்லை. ஏனென்றால் இது ஒரு திட்டமிட்ட கணக்கு. இந்த "பாலன்ஸ்ஷீட்" டை மாற்றினால். கணக்குச் சரிப்பட்டுவராது. எது நடக்கமுடியாதோ, அதற்கு நாம் பிரயாசை எடுத்துக் கொண்டாலும் நடைபெறாது. எது நடக்க வேண்டுமோ. அது நாம் எவ்வளவு தூரம் தடுத்தாலும் நடந்தே தீரும்.

ஓர் இயந்திரத்தை நிறுவும்போதே அது இன்னின்ன வேலைகளைச் செய்யவேண்டும் என்று தீர்மானித்து அமைத்து விடுகிறோம். அதை மாற்றிச் செய்ய இயந்திரத்திற்கு அதிகாரம் இல்லை. அதைப்போல நாம் வந்து பிறக்கும்போதே, நம்மால் இன்னின்ன நடக்கவேண்டும் என்பதை ஆண்டவன் தீர்மானித்து விடுகிறான். அதிலிருந்து நாம் மாறுபட முடியாது.

மனிதன் பக்தியினால் இன்ன செய்கை பிராரப்தம். இதன் செய்கை அப்படி அல்ல என்பதை உணரும் பக்குவம் பெறுகிறான். அதன் மூலம் அவன் மேலும் தீயனவற்றில் ஈடுபட்டு, அடுத்த பிறவிக்கும் சுமைகளைச் சேர்த்துக் கொள்ளாமல் தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறான். அப்படி மனப்பக்குவம் பெற இது உதவும். விளைவுகளின் சுகமும் துக்கமும் அப்படிப் பட்டவனைப் பாதிப்பதும் இல்லை.

***பகவான் ரமணர்***

# நெஞ்சுக்கு நிம்மதி

எளிதில் புரிந்து கொள்ள முடியாத ஒன்று நமது மனம். வருடக்கணக்காக அறிஞர்கள் பலர் இந்த மனம் என்பது யாது, அதனது தன்மை எத்தகையது என்பதைப் பற்றி யெல்லாம் ஆராய்ந்து பல்வேறு கருத்துக்களை நமக்குத் தந்து சென்றிருக் கின்றனர். எனினும் மனத்தைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் தொடர்ந்து நடந்து கொண்டு தானிருக்கிறது.

அந்த ஆராய்ச்சிக்கு முடிவே கிடையாதோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது. எனவே தான் நமது மூதறிஞர்கள் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பேயே மனதினைப் 'பற்றிய ஆராய்ச்சியை நடத்தி "மனதை அடக்குவதே யோகம்" என்ற முடிவிற்கு வந்தனர்.

மனித மனம் பெற்று விளங்கும் சக்தி ஒப்பற்றது. ஒருவனை அழிக்கவும், ஆக்கவும் அதனால் இயலும். மனித வாழ்க்கையை மனத்துடன் மனிதன் நடத்தும் இடைவிடாத போர் என்று சுருக்கமாகக் கூறிவிடலாம். ஒருவனுடைய சிறந்த நண்பன் அவனுடைய மனம். அதே வேளையில் அவனுடைய பரம எதிரியாகவும் அது விளங்குகிறது.

மனத்தின் வழியில் தாங்கள் செல்பவர்கள் கீழோர். தங்கள் வழியில் மனத்தை செலுத்துபவர்கள் மேலோர். மனம் ஓயாது அங்குமிங்கும் அலைந்து திரியும் தன்மை யது. பல்லாண்டு காலம் சாதகர்கள் பயிற்சி செய்வதெல்லாம் இடைவிடாது அலைந்து திரியும் மனதைச்சிறிது நேரமாவது கட்டுப் படுத்தி வைக்கத்தான். அவ்விதம் சிறிது நேரமாவது மனம் ஒடுங்குமேயானால் அந்த வேளையில் கிடைக்கப்பெறும் அமைதியின் மகிமையை அனுபவித்தவரே அறிவார்.

நிறமற்ற கண்ணாடி ஒன்றை நீல நிறத் துணியின் மீது வைத்தால் நீல நிறத்ததாகத் தோன்றுகிறது. சிவப்பு நிறத் துணியின் மீது வைத்தால் அது சிவப்பு நிறமுடையதாகத் தோன்றுகிறது. அதாவது, கண்ணாடி எதனுடன் சேருகிறதோ அதனது தன்மை யைத் தற்காலிகமாகப் பெறுகிறது. மனித மனமும் அது எந்தச் சூழ்நிலையில் இருக்கிறதோ, அந்தச் சூழ்நிலையின் தன்மையை அடைகிறது. தீயார் சேர்க்கை யில் அதை விட்டு விட்டால் அது தீய குணங்களைப் பெறுகிறது. நல்லவர் தொடர 'பில் இருக்கச் செய்தால் அது நல்ல குணங்களைப் பெறுகிறது.

மேலேயிருந்து கீழே விழுதல் எளிது. ஆனால் கீழேயிருந்து மேலே ஏறுவது கடினம். தண்ணீர் மேட்டுப் பகுதியிலிருந்து பள்ளத்தை நோக்கித்தானே எளிதில் பாயும். ஆனால் பள்ளத்திலிருந்து மேட்டுப் பகுதிக்கு பாய்ச்சுவதற்கு மின்சாரத்தின் உதவி தேவையாயிருக்கிறது. அதுபோல் தீய குணங்கள் மனத்தில் வெகு எளிதில் பதிந்து விடுகின்றன.ஆனால் நல்ல குணங்களைப் பெற்று விளங்குதல் மிகவும் கடினம்.

கிளி ஒன்றை சாதுக்களின் தொடர்பில் விட்டுவைத்தால் அது "ராம்" "ராம்" என்று சொல்லக் கற்றுக் கொள்ளும். முரடர்களின் தொடர்பில் விட்டு விட்டால் அதே கிளி "வெட்டு" "கொல்லு" என்ற வார்த்தைகளைக் கற்றுக் கொள்ளும். அதுபோல் மனமும் சூழ்நிலைக்கேற்றவாறு மேலானதாகவோ அல்லது கீழானதாகவோ அமைகிறது. பல்வேறு நிலைகளில் நமது மனநிலையை ஆராய்ந்தால் இந்த உண்மை புலப்படும். உதாரணமாக, நண்பர்களின் வற்புறுத்தலுக கிணங்க நாம் ஒரு சினிமாவிற்குச் செல்வதாக வைத்துக் கொள்வோம். சினிமாத் திரையில் பற்பல காட்சிகள் தோன்றி மறைகின்றன. படத்தில் பார்த்த காட்சிகள் நமது மனத்திரையிலும் விழுகின்றன. அவை நமது சக்தியைவடித்துவிடுகின்றன.

மாறாக, சினிமாவிற்கு அழைக்கும் நண்பர்களது வற்புறுத்தலுக்குச் செவி கொடுக்காது, சத்சங்கம் நடைபெறும் இடத்திற்கு நாம் செல்வதாக வைத்துக் கொள்வோம். சத்சங்கத்திற்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தவுடனேயே நமது மனநிலை அடியோடு மாறிவிடுகிறது. சத்சங்க மண்டபத்திற்கு வெகு தொலைவில் இருக்கும் பொழுதே அங்கு நடைபெறும் இனிய

பஜனையின் ஒலி காதில் விழுகிறது. உடனே நம்மையறியாது ஒருவித பரவச ' நிலைக்கு நாம் உள்ளாகிறோம். உலக சிந்தனைகளி லிருந்து விடுபட்டு மனம் இறைவனைக் குறித்தும் மகான்களைக் குறித்தும் சிந் திக்கத் தொடங்குகிறது. சத்சங்கத்தில் மகான்கள் ஆற்றும் சொற்பொழிவு நமது மனத்திற்கு அமைதியையும், ஆனந்தத்தையும் தருகிறது. அங்கு நடைபெறும் பஜனையில் லயித்தவாறு நாம் மணிக்கணக்காக உட்கார்ந்திருக் கின்றோம். சத்சங்கம் முடிந்து வெளியே வருகையில் ஏதோ புத்துணர்ச்சி நம்முள் புகுந்தது போன்று உணர்கின்றோம். தெய்வீக இன்பத்தில் திளைத்தவாறு இப்படி சதாகாலமும் சத்சங்கத்தில் இருந்துவிட்டா லென்ன என்று மனம் சிந்திக்கிறது. இது போன்று அன்றாடம் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் மனதின் வெவ்வேறு விதமான பதிவுகளை ஏற்படுத்துகின்றது. நாம் எத்தகைய நிகழ்ச்சிகளில் பங்கு கொள்கி றோம், யார் யாருடன் எத்தகைய இணக்கம் கொள்கிறோம் என்பதைப் பொறுத்தே நமது மனோநிலையும் அமைகிறது. மனதின் அமைதியைக் குலைக்க வல்ல நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு விட்டு, மனதின் அமைதி 'யைக் கெடுக்கவல்ல நபர்களுடன் இணக்கம் வைத்துவிட்டு, பிறகு அமைதியில்லை, ஆனந்தமில்லை என்று குறை கூறுவது நாமே வேண்டுமென்று சுவரில் முட்டிக் கொண்டுவிட்டு, "ஐயோ வலிக்கிறதே" என்று தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்வதற்கு சமமாகும்.

மன அமைதி வெளியே வீதியில் விலை கொடுத்து வாங்கும் ஒரு பொருளல்ல. மன அமைதிக்குப் பணம் தேவையில்லை. விலையுயர்ந்த பொருளைப் பணம் கொடுத்து விலைக்கு வாங்கி விடலாம். ஆனால் மன அமைதியை எங்கே போய் யாரிடம் வாங்குவது? பணத்திற்கும், அமைதிக்கும் வெகு தூரம். பணமும் பொருளும் கூடக்கூட ஒருவன் பெற்று விளங்கும் மன அமைதி குறைகிறது. பணமும், மன அமைதியும் எதிரிடை விகிதத்தில் தொடர்பு கொண்டு ள்ளன. அதற்கான காரணம் சொல்லாமலே விளங்கும். பொருளைப் பெறும்வரை பெற வேண்டும் என்ற நாட்டம், பெற்றபின் அதைக்காக்க வேண்டுமே என்ற ஏக்கம். அது எமது கையை விட்டுப் போனபொழுது "ஐயோ போய்விட்டதே" என்ற துக்கம். ஆக எல்லா நிலைகளிலும் மனம் அமைதியின்றித் தவிக்கிறது.

பொதுவாக, நாம் நம்மிடம் பணமும் பொருளும் நிறைய இருந்தால் இன்பமாகவும் மன அமைதியோடும் வாழலாம் என்று எண்ணுகிறோம். ஆனால் பொன்னும் பொரு ளும் நிரம்பப் பெற்றுள்ள அநேகர் அவற்றால் மன அமைதியை பெறமுடியாது தவிக் கின்றனர், குறிப்பாக அயல் நாட்டவர், அவற்றின் பிடியிலிருந்து விடுபட்டு எளிய வாழ்க்கை வாழ முனைகின்றனர். கங்கைக் கரையில் அமைந்திருக்கும் ஆச்சிரமங்கள் பலவற்றில் வசிக்கும் சாது மகாத்மாக்களின் வாழ்க்கையை ஆராய்ந்தால் இந்த உண்மை புலனாகும்.

ஆனால், உலகில் வாழ்தற்குப் பொருள் வேண்டும். பணம் வேண்டும். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை. எனவே பொருளைப் பெறவும் வேண்டும், மன அமைதியோடு வாழவும் வேண்டும். இது எப்படிச் சாத்தியமாகும் என்ற ஐயம் மனத்தே எழலாம். எனவே தான், மறை நூல்கள், நண்பா! நீ உனக்குத் தேவையா பொருளை அறவழியில் ஈட்டு. ஈட்டிய பொருளை என்னு டையது என்று எண்ணாது, இறைவன் தந்தது இச்செல்வம் என்று எண்ணி, அதனிடம் பற்று வையாது அதனைப் பயன்படுத்து. உனக்குத் தேவையானது போக மிகுதியை வேண்டிய வர்க்கு கொடு. உன் வாழ்வில் அமைதியும், மகிழ்ச்சியும் பெருகும்" என்று இவ்வுலகில் பொருளைப் பெற்று விளங்குவதற்கிடையில் மன அமைதியையும், இன்பத்தையும் பெற்று நல்வாழ்வு வாழ்வதற்கான வழியைக் காட்டுகின்றன.மன அமைதி பெற நல்லார் இணக்கம் வேண்டும். சத்சங்கம் வேண்டும்.

எனவே நல்லார் இணக்கம் கொள்வோம் நல்ல நூல்களைக் கற்போம். இறைவன் நாமத்தை ஜபிப்போம். இனிய கீர்த்த னைகளைப் பாடுவோம். மனஅமைதியை அடைவோம்.அதற்கு இறைவன் அருள் நமக்குத் துணை நிற்குமாக!

# ஞானமும் ஆனந்தமும்

ஆனந்தம் வேண்டும் என்பதற்காகத் தான் நாம் செய்கின்ற எல்லாக் காரியங்களும். ஆனால் இந்தக் காரியங்களினால் அடைகிற சந்தோஷம் எல்லாமே ரொம்பவும் தற்காலிகமாக இருந்து மறைந்துதான் போகின்றன. எதுவுமே கலப்படமில்லாத சந்தோஷமாக இல்லாமல் கையோடேயே ஒரு துக்கத்தையும் அழைத்துக்கொண்டுதான் வருகிறது பலகாரம் சாப்பிட்டால் சந்தோஷமாயிருக்கிறது. வயிற்றுவலியும் வருகிறது. குழந்தையை ப்பார்த்தால் சந்தோஷமாயிருக்கிறது. அதற்கு ஒரு நோய் வந்துவிட்டால் இந்த சந்தோஷத்தைப்போல் நாலு மடங்கு கவலை எற்படுகிறது. நிறைய பணமிருந்தால் சந்தோஷமாயிருக்கின்றது. அதேசமயத்தில் திருட்டுப்போய் விடப்போகின்றது வங்கி முழுகிபோய் விடப் போகின்றதே உயர்த்திவிடப்போகிறார்களே எவனாவது டொனேஷன் என்று கேட்டுக்கொண்டு வந்து விடப் போகிறானே என்றெல்லாம் பல தினுசான கவலையும் பயமும் உண்டாகின்றது. இப்படி எல்லாமே தற்காலிக சந்தோஷமாகவும் சந்தோஷத்தோடேயே துக்கமும் கலந்ததாகவும் தான் இருக்கின்றன.

எல்லாம் ஒரே பரமாத்மா ஸ்வரூபம் என்று எப்போதும் ஞானம் உண்டாகிறதோ- ஞானம் என்றால் intellectual ஆக ஒரு conclusion-க்கு வருவது (அறிவாராய்ச்சியால் ஒரு முடிவுக்கு வருவது) என்று அர்த்தமில்லை. அனுபவத்தில் அது ஸத்தியம் என்று நிச்சயமாக தெரிந்து கொள்வதுதான் ஞானம்- அப்போதுதான் துக்கக்கலப்படமில்லாத நிர்மலமான ஆனந்தம், தற்காலிகமாக இல்லாமல் சாசுவதமாக உள்ள ஆனந்தம் சித்திக்கிறது'

ஞானத்தினால் ஆனந்தம் என்றால் சரியில்லை. அதாவது ஞானம் என்பது (உபாயம்)அதனாலே அடைகின்ற (குறிக்கோள்) ஆனந்தமாகும் என்று அர்த்தம் பண்ணிக் கொண்டால் அது சரியில்லை. பலகாரம் சாப்பிட்டோம் அதனால் சந்தோஷம் உண்டாயிற்று என்கின்ற மாதிரியில்லை இது. பலகாரம் வேறே சந்தோஷம் வேறே. பலகாரம் சந்தோஷமாயிருந்தால் வயிற்றுவலி என்ற துக்கம் வரக்கூடாது. ஞானமும் ஆனந்தமும் இப்படி வேறே வேறே வஸ்து இல்லை. ஒன்றினால் மற்றதை அடைகின்றது என்பதில்லை இரண்டும் ஒன்றேதான். எல்லாம் பரமாத்ம ஸ்வரூபம் என்கின்ற அனுபவ ஞானம் உண்டாகிவிட்டால் இதுவேதான் ஏற்றத்தாழ்வு இல்லாத ஸதானந்தம்

பட்சணம் தித்திக்க வேண்டு மென்றால் சர்க்கரை போடவேண்டும். கரும்பு தித்திக்கிற தென்றால் அதற்கு நாமாக எதையோ போட்டா தித்திக்கப் பண்ணினோம்? அது தன்னியல்பாகவே தித்திப்பாக இருக்கின்றது. இப்படி ஞானம் என்பது தானே ஆனந்த மாயிருக்கிறது.

இம்மாதிரி எல்லாவற்றையும் பரமாத்ம ஸ்வருபமாகப் பார்க்கிற ஞானத்திற்குத்தான் நாம் முயற்சிபண்ண வேண்டும். இப்போது ஆனந்தம் வேண்டும். ஸந்தோஷம் வேண்டும். என்றுதான் சகல முயற்சிகளும் காரியங்களும பண்ணுகிறோம். உத்யோகம் பண்ணுவது, குழந்தை குட்டிகளைப் பெற்றுகொள்வது, பணம் சேர்ப்பது க்ளப்புக்குப் (ஹோட்டலுக்கு) போவது, சினிமாவுக்குப் போவது என்றபடி- இன்னும் என்னென்ன செய்கிறோமோ

அவை எல்லாமும் சந்தோஷம் வேண்டும்என்ற ஒன்றுக்காகத்தான. ஆனால் ஒவ்வொன்றாலும் உண்டாகின்ற சந்தோஷத் தோடு கூட அதை விடவும் துக்கம், விசாரம், சதி, பயம் எல்லாம் உண்டாகின்றன. இந்த சந்தோஷங்களில் எதையும் சாசுவதமாக்கி பிடித்து வைத்துக் கொள்ளவும் முடியவில்லை

இதனால் மனிதப்பிறவி ' எடுத்த எல்லாரும் ஞானத்தை அடைவதற்கு பிரயத்தனம் பண்ண வேண்டும். "எல்லாம் உன் சுவரூபம் என்ற ஞானம் வரும்படி அநுக்கிரகம் பண்ணப்பா" என்று ஈசுவரனை மனஜாரப் பிராத்தனை பண்ணிக் கொள்ள வேண்டும். ஞனம் வந்து விட்டால் போதும் தன்னால் ஆனந்தமும் வந்து விடும். இந்த ஸந்தோஷம் வேண்டும். அந்த ஸந்தோஷம் வேண்டு மென்று பறந்து கொண்டு எந்த ஸந் தோஷத்தையும் சாசுவதமாக்கிக் கொள்ள முடியாமல் திண்டாடுவதைவிட்டு ஞானம் ஞானம் வர வேண்டும் என்று முயற்சி பண்ண வேண்டும். "ஆனந்தம் வேண்டும" என்று கேட்கவேண்டியதில்லை. ஞானத் தைப் பிரா்த்தித்து அதற்காக முயன்றாலே தானாக ஸதானந்தம் கிடைத்து விடும்.

ஒரு குழந்தை ரொம்ப அழகாகப் பிறந்திருக்கின்றது என்றால் அந்தக் குழந்தை வேறே அழகு வேறேயா என்ன? இப்படித்தான் ஞானமும் ஆனந்தமும். அந்தக் குழந்தை சுய உத்தேசத்தின் மேலா-நாம் அழகாக இருக்க வேண்டும் என்று Plan பண்ணிக் கொண்டா ( திட்டம் போட்டுக் கொண்டா) அப்படிப் பிறந்தது. இந்த மாதிரி ஞானம் தானாகவே ஆனந்தமாக இருக்கின்றது. இதனால் ஆனந்தமாகத் தான் இருக்க முடியும். இப்படிப்பட்ட ஸத்திய ஞானத்தை அடைய நம்மாலான முயற்சியைப் பண்ண வேண்டும்.

இதற்கு பொழுது கிடைக்கவில்லை என்று சொல்வது கொஞ்சங் கூட சரியில்லை. ரொம்பவும் தற்காலிகமான ஆனந்தத்தை உத்தேசித்தே ஏற்பட்டிருக்கின்ற சகல காரியங்களையும் பண்ணப் பொழுது இருக் கிறது. எது சாசுவத சுகமோ அதற்கு பிரயத்தனம் பண்ணப் பொழுது இல்லை. என்று சொன்னால் நம்மைப் போல முட்டாள் இல்லை. என்று தான் அர்த்தம்.

மாயை இயற்கை nature என்று இத்தனையை வைத்து பகவான் லீலை செய்கிறதும் இதிலே செய்கின்ற காரியங் களைக் கொண்டே இவற்றுக்கு அப்பாற்பட்ட ஸ்தானத்துக்கு நாம் வழி தேடிக் கொள்கிறோமோ என்று பரீக்ஷை பார்க்கிறத்திற்குத்தான். ஆகையால் கர்மா கழிகிற வரையிலே இந்த உலகத்திலே நாம் கடமைகளை கர்மாக் களை அநுஷ்டானம் பண்ணிக்கொண்டிருக்க வேண்டிதுதான். இதிலே தாம்பத்தியம், சாப்பிடுவது பொழுது போக்குகளை ரஸிக் கிறது எல்லாம் கூட அடக்கம் தான். வரம்பு மீறாமலிருக்கிற வரை எதுமே தள்ளு பாடில்லை. எல்லாம் நாம் பக்குவமாவதற்கு படிப்படியாக உதவி செய்கிறவை தான். ஆனால் இதுகளோடேயே நின்று விட்டு பரமாத்ம சிந்தனைக்குப் பொ்ழுதே இல்லை என்றால் நாம் எத்தனை எம், ஏ - பி, ஏ படித்திருந்தாலும் டாக்டர் பட்டம் வாங்கி யிருந்தாலும் என்று தான் அர்த்தம். சம்பாதிப்பது, படிப்பது குடும்ப வாழ்க்கை நடத்துவது எல்லாவற்றுக்கும் பொழுது இருக்கின்றது. ஞானத்துக்கு முயற்சி பண்ண பொழுது இல்லை என்பது குப்பையை எல்லாம் சேர்த்து மூட்டி எரிப்பதற்கு பொழுது இருந்தது. ஆனால் குளிர்காயப் பொழு தில்லை. என்றும் வேலை செய்யப் பொழு திருந்தது. கூலிவாங்கப் பொழுதில்லை. என்றும் சொல்வது போலத்தான். மற்ற சகல காரியமும் பரமாத்மா தியானத்தில் சேர்ப்பதற்குத்தான். சங்கற்ப பலமில்லாததால் இதற்குப் பொழுதில்லை என்கிறோம். Where there is a will there is a way மனம் இருந்தால் வழியுண்டு என்பது இதுதான்.

# தர்ம சாஸ்தாவான ஐயப்பன்

எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே என்றாலும், அவனது பல்வேறு குணங்களை செயல்களை வைத்து அவனுக்கு பல வடிவங்களையும் நாமங்களையும் தந்திருக்கின்றது இந்து தர்மம். அவனது வடிவங்களில் ஒன்று ஐயப்பன் என்னும் தர்ம ஸாஸ்த்தர வடிவம். மற்ற எல்லாத் தெய்வங்களுடன் சேர்த்துச் சொல்லப்படாத ஒரு விசேஷ சொல்லைச் சேர்த்து சாஸ்தாவை தர்மசாஸ்தா என்று சாஸ்த்திரங்கள் குறிப்பிடுகின்றன. அதற்கு என்ன காரணம்?

இவ்வுலகில் அதர்மங்கள் அதிகமாகி தர்மங்கள் நசிந்து போகும் போது, துஷ்டர்களை அழித்து நல்லவர்களைக் காத்து தர்மத்தை நிலைநாட்ட நான் எல்லா யுகங்களிலும் அவதாரம் செய்வேன். என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணன், கீதையில் உரைத்த படி, கலியுகத்தில் தர்மத்தை ஸ்தாபிக்க பந்தள நாட்டில் அவதரித்த ஹரிகர புத்ரன் தர்மஸாஸ்தா என்று பூஜிக்கப்படுகிறான்.

தர்மம் என்ற சொல் ஒழுக்கம், நீதி நியாயம், நேர்மை என்ற பொருள்களையும் குறிக்கும். தீவிரமான விரதமிருந்து நல்ல ஒழுக்கங்களைக் கடைபிடித்து, நீதி நேர்மை தவறாமல் தூய உள்ளத்துடன் செல்பவருக்கே சபரி மலையில் ஐயப்பன் பிரத்ணயட்சமாக தரிசனம் தருகிறான். தருமத்தின் வழி நிற்கும் அடியவர்களுக்கு அருளுவதாலும் அவன் தர்ம ஸாஸ்த்தா எனப்படுகின்றான். தர்மம் என்றால் இல்லாதவர்களுக்கு தன்னிடம் உள்ளதை வழங்கும் கொடைத்தன்மை என்றும் பொருள் உண்டு. சபரிமலை ஐயப்பன் தான தர்மங்கள் செய்து தன்னை வழிபடும் பக்தர்களுக்கு வரமளிப்பவன். அதனாலும் அவன் தர்மசாஸ்தா என்று பெயர் பெறுகிறான்.

எனவே தர்ம ஸ்தாபனத்திற்காக அவதரித்தாலும் தர்ம நெறியுள்ளவர்களுக்கு அருளளிப்பதாலும் இவ்வுலகில் தர்மங்கள் தழைக்க காரண கர்த்தாவாக இருப்பதாலும் அவன் தர்மசாஸ்தா ஆகிறான். அன்னதானப் பிரபுவே சரணம் ஐயப்பா என்று அவனை வழிபடுவது பசித்தவருக்கு உணவழித்து அன்னதானப் புண்ணியம் தேடிக் கொண்டவர்கள் ஐயப்பனின் பூரண அருளுக்கு பாத்திரமாகிறார்கள் என்பது விளங்குகிறது. மலைக்குச் செல்லும் ஐயப்பன்மார் மாலை நேரங்களில் கூடி ஐயப்பன் நாமம் பாடி அடியவர்களுக்கு பிரசாதம் அளித்து ஆனந்தமடைவது ஐயப்பனுக்கு பிரீதியான காரியம். அடியவர் ஒருவருக்கு அன்னமளித்து அதன் பின்பு தான் உணவருந்துவது விரத நாட்களின் விதி ஒழுக்கத்தில் தலை சிறந்த சுயகட்டுப்பாடு தான். பிறர் வலியுறுத தலுக்கோ கண்டிப் புக்கோ பயந்து ஒழுக்கத் தைக் கடைப்பிடிப்பது உயர்ந்த ஒழுக்கமல்ல. தன் மனதால் ஏற்றுக் கொண்டு தானே விரும்பிக் கடைப்பிடிக்கும் நன்நெறிதான் சிறந்த ஒழுக்கம். சபரி மலைக்குச் செல்லத் தீர்மானிக்கும் போது இத்தகைய சுயகட்டுப்பாட்டில் உருவாகும் ஒழுக்கம் ஐயப்பன்மார்களிடம் உருவாகின்றது. கெட்ட பழக்கங்களுக்கு மாத்திரமல்ல நல்ல பழக்கங்களுக்கும் அடிமையாவது இயற்கை அந்த அடிப்படையில் ஒரு முறை விரதமிருந்து சபரிமலைக்குச் சென்றால் ஒவ்வொரு ஆண்டும் செல்ல வேண்டும். ஐயப்பனை தரிசிக்க வேண்டும். என்ற விருப்பம் மேலிட்டு விடும். ஒவ்வொரு ஆண்டும் சில நாட்கள் நல்லொழுக்கங்களைக் கடைபிடிக்கப் பழகி

விட்டால் அதுவே பின்னால் நிரந்தரமான ஒழுக்கமாக ஒருவனிடம் அமைந்து விடும்.

அப்படி நிகழாமல் ஒரு சிலர் வருடத்தில் பல நாட்கள் பாவங்களையே புரிந்து விட்டு ஒரு சில நாட்கள் மட்டும் விரதமிருந்து ஐயப்பனை வழிபட்டு சபரி மலைக்குச் சென்று விட்டு வந்து விட்டால் பாவங்கள் போய்விடும். அப்புறம் வருடத்தின் மற்ற நாட்களை எப்படி வேண்டுமானாலும் கழிக்கலாம். என்று எண்ணினால் அது அவர்கள் அறியாமையைக் குறிக்கும். தெரிந்தும் தெரியாமலும் அறிந்தும் அறி யாமலும் செய்த பிழை பொறுத்தருளும். என்று சொல்லும் போது செய்த தவறை திருப்பச் செய்ய மாட்டேன் என்ற உறுதி மொழி மறைந்து நிற்கின்றது. அதனை உணராமல் இந்தச் சொல்லை வெறும் சடங்காக உச்சரிப்பது தர்மமில்லை. அதனால் தான் அவன் பெயர் தர்மசாஸ்தா. ஓராண்டில் நாற்பது நாட்கள் விரதம் கடைப்பிடித்து ஒழுகும் போது நமக்குள் உருவாகும் பொறுமை, தயை, தர்மசிந்தை, கருணை, அன்பு, இரக்கம், நியாய உணர்வு, நீதி, நேர்மை, ஒழுக்கம் ஆகிய நற்பண்புகள் விரதகாலத்தில் மட்டுமே நம்முள் இருந்து விட்டு மகர ஜோதியோடு மறைந்து விடுமானால் அதனால் ஐயப்பன் திருப்தி அடைவாரா? இல்லை. தன்னை நாடி வரும் குழந்தைகள் வாழ்நாள் முழுவதும் நல்லொ ழுக்கத்தைக் கடைப்பிடித்தொழுகி தன் அன்பர்களாக இருக்க வேண்டுமென்று தான் அவன் விரும்புவான். அவன் விருப்பத்தை பூர்த்தி செய்வது தான் அவன் அடியவர்கள் கடமை.

நான் என்ற அகம் அழிவது தான் உயர்ந்த தர்மம். அந்த தர்ம நெறியைக் கடைப்பிடிப்பவர்களே சாஸ்தாவின் உண்மை பக்தர்கள். அதற்காகவேதான் சரணம் சரணம் என்று சரணாகதி செய்து பழகுகிறோம். ஜாதி மதங்களால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடும், ஏழை பணக்காரன் என்ற பேதமும் சாஸ்தாவுக்குக் கிடையாது. ஆனால் தர்மம் அதர்மம் என்ற பேதம் அவனுக்கு நிச்சயம் உண்டு. அவன் பெயரால் நடக்கும் எந்த அதர்மத்தையும் அவன் கண்டிக்கத் தவறமாட்டான். அதனால் தான் அவன் தர்மசாஸ்தா என் பூஜிக்கப் படுகின்றான்.

வழிபாட்டு முறைகளில் மற்ற தெய் வங்களுக்கில்லாத ஒரு புதிய முறை ஐயப்பனுக்கு உண்டு. அதுதான் சரண கோஷம் ஸ்வாமியே சரணம் ஐயப்பா என்ற மந்திரமே சாஸ்தாவுக்கு உகந்த மந்திரம். சரணாகதி எனத் தன்னை அண்டியவர் களுக்கு அருள் பாலிப்பவன் அவன். சரணம் என்றால் உடல், பொருள் ஆவி மூன்றும் இறைவன் திருவடிக்கே அர்ப்பணம் என்று பொருள்.

பகவான் ஸ்ரீகிருஷ்ணன் பகவத்கீதையில் மாமேகம் சரணம் வ்ரஜா என்று தன்னையே சரணடையும் படி அர்ஜுனனுக்கு கூறுகிறான். அந்த சரணகதி தத்துவத்திற்கு எடுத்துக் காட்டான தெய்வம் ஸ்வாமி ஐயப்பன்.

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுக்கும் உரிய பிரம்மா, விஷ்ணு, சிவன் மூன்று தெய்வங்களின் அம்ஸமும் ஒருங்கே அமைந்த கலியுக தெய்வம் ஹரிகர புத்திரன் தரணி காக்கும் தர்மசாஸ்தா அவன்.

# எது பக்தி ?

நாம் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்திருப்போம். செய்தவற்றிற்கு சில சமயங்களில் பலன் கிடைக்காமலிருந்தால் நாம் கர்ம விதியையே தவறாக நினைத்து விடுவோம். நாம் செய்தவற்றில் என்ன தவறு என்று பார்க்கமாட்டோம். செய்த கர்மாவில் மட்டும் 'அசிரத்தை உண்டாக்கிக் கொள்வோம். முதலில் சிரத்தையோடு கர்மா வை செய்தாலும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. அப்போது என்ன செய்வது?

ஒருவனுக்கு ஒரு வைத்தியர் மருந்து கொடுத்தார். ஆனால் அவனுக்கு மருந்தினால் பலன் மட்டும் கிடைக்கவில்லை. ஏனென்றால் மருத்துவர் கூறியதை அவன் கவனத்துடன் கேட்கவேயில்லை. கேட்டாலும் அதுபடியே நடந்துகொள்ள அவனுக்கு சக்தியில்லை. அதனால் வைத்தியர் கொடுத்த மருந்தை மட்டும் சாப்பிட்ட அவன் பிறகு தன் இஷ்டம் போலவே இருந்தான். பலன் ஏதும் கிடைக்கவில்லை. உடனே மருத்துவன் உபயோகப்பட மாட்டான் என்ற தீர்மானத்திற்கு அவன் வந்துவிட்டான்.

பத்தியும் மருந்தும் சேர்ந்தால்தான் வியாதி குணமாகும். பத்தியம் அனுஸரிக் காமல் நாம் மருந்தை மட்டும் சேகரித்துக் கொண்டே போனால் வியாதி குறையாது. ஒரு வேளை அது அதிகமானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நம் எல்லோருக்கும் பகவானிடம் அன்பு இருக்கும். அது எதுவரைக்கும் இருக்குமென்றால் அவரவர் காரியம் முடியும் வரை அன்பிருக்கும். காரியம் முடிந்தபின்பு சில சமயம் பகவானையே மறந்துவிடுவோம். முடியாவிட்டால் முன்னே சொன்னது போல் பகவான் அருள் புரியவில்லை குறை கூறி விடுவோம்.

"உபாத்யாயாச்ச வைத்யாச்ச கார்யாந்த தேசப்ரயோஜகா" ((ஆசிரியர்களும், மருத்துவர்களும் காரியம்முடிந்தவுடன் பிரயோஜன மற்றவர்கள்' (ஆகிவிடுவார்))

மேற்கூறப்பட்ட ரீதியில் இறைவனையும் சேர்த்து விடுவர். நாம் வேண்டிக்கொண்டது நடக்கும் வரை இறைவனிடம் பிரார்த் தனையெல்லாம் செய்துகொண்டிருப்போம். காரியம் முடிந்த பிறகு கோவிலுக்குப் போவதையே விட்டாகிவிட்டது. அப்படி இருக்கக் கூடாது.

உலகத்தில் நாம் எவ்வளவோ விஷயங்களில் பிரேமை வைப்போம். ஆனால் அந்தப் பிரேமை என்றும் நிலையாக இருப்பதில்லை. ஏனென்றால் சிறு' வயதில் சில விஷயங்களில் பிரியம் இருக்கும். சற்றே வயதானபின் பையன் தந்தையிடமிருந்து பணம் கேட்கிறான் . அப்பாவிற்கு பணம் கொடுக்க இஷ்டமில்லை. பையன் விட மாட்டான். கடைசியில் இரண்டு பேருக்கும் சண்டைதான். எப்பேர்பட்ட சண்டையென்றால் அப்பாவின் முகத்தைப் பையன் பார்க்க மாட்டான். அப்பா பையனின் முகத்தைப் பார்க்க மாட்டார். இங்கே பையனிடம் வைத்த பிரேமை மாறிவிடுகின்றது.

இதற்குக் காரணம் என்னவென்றால் பரமபிரேமை என்பது வேறு எங்கேயும் கிடையாது. பரமப் பிரேமை என்பது இருந்தால் அது ஒரு விஷயத்திலேதான் இருக்க முடியம். என்று சொன்னார் சங்கரர். அதை தான் அவர் ஆத்மாக்ய வஸ்து (ஆத்மாதான் ஒருவனுக்கு என்றைக்கும் மிகவும் அன்பிற்குரிய வஸ்து.) என்று கூறியுள்ளார். ஒருவன் எந்த விஷயத்தில் பிரேமை வைத்தாலும் கூட இந்த ஆத்மாவிற்காக ஒருவன் பிரேமை என்றுவைத்திருக்கிறானே ஒழிய அந்த பொருளிற்காகத் தனியே எந்த விதமான பிரேமையும் கிடையாது. மனிதர்கள் தம்

குழந்தைகள் நண்பர்கள் ஆகியோரின் விஷயத்தில் அன்பு வைத்திருப்பர். அவ்வாறு பிரேமையாக இருப்பதற்குக் காரணம் அவர்களால் தனக்கு சந்தோஷம் ஏற்படுகிறது என்பதேயாகும். எதுவரைக்கும் ஒருவன் ஒரு பொருளிலிருந்து இன்பத்தைப் பெறுகிறானோ அதுவரைக்கும் அது பிரியமாக இருக்கிறது. எதுவரை அது துன்பத்தைத் தருகிறதோ அதுவரை அது பிரியமற்றதாக இருக்கிறது. ஒரே பொருள் எப்போதும் பிரியமாகவோ பிரியமற்றதாகவோ இருப்பதில்லை. சில சமயங்களில் எது பிரியமற்று இருக்கிறதோ அது பிரியமாகலாம். மேலும் எதில் பிரியம் இருந்ததோ அது அபபிரியமாகலாம். ஆதலால் ஆத்மா என்னும் வஸ்து எப்போதும் மிகவும் பிரியமாக இருக்கிறது என்று சங்கரர் கூறியுள்ளார்.

ஒருத்தனுக்கு மற்றவர் வேண்டாமென்றாலும் தனக்குத் தானே வேண்டாம் என்று எங்காவது உண்டா? ஒருவன் எவ்வளவு கெட்டவனாக இருந்தாலும் தனக்குத்தான் நல்லவன் என்றே கருதுவான். தான் கெட்டவன் என்று ஒரு போதும் நினைக்க மாட்டான். யார் என்ன வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும். எனக்கு நான் சரியாகவே இருக்கிறேன் என்று நினைப்பதே மனிதனுடைய இயற்கைக் குணம்.

தன்னிடத்தில் தானே வைத்திருக்கும் பிரேமையைப் பகவானிடத்தில் வைத்து விட்டால் அதுவே பரமப்பிரேமையாகிவிடும். பரமப்பிரேமை வந்தால் பகவான் கூட வேறெந்தப் பொருளும் பிரியமானதாகத் தெரியாது. இத்தகைய மனோ நிலையுடன் கூடிய பரமப்பிரேமைதான் உண்மையான பக்தி.

# தூக்கம்

உடல் உறுப்புக்களெல்லாம் பார்ப்பது-சாப்பிடுவது-நடப்பது போன்ற பல காரியங்களைச் செய்கின்றன. அவை ஒரு மின்சார யந்திரம் போல வேலை செய்து கொண்டேயிருக்கின்றன. இந்த உடல் உறுப்புகளுக்கு ஓய்வு வேண்டும். தூங்குவதற்கு முன்பு உடல் உறுப்புக்களெல்லாம் களைத்துப்போய் அசதியாக இருக்கும். தூங்கி எழுந்த பிற்பாடு உடல் புதுத் தெம்புடன் சுறுசுறுப்பாய் இருக்கும்.

ஆனால் அரைகுறைத் தூக்கத்துடன் எழுந்துவிட்டாலோ வேலைசெய்வதற்குச் சோம்பல்பட்டு தூங்குவது போல பாசாங்கு செய்தாலோ, அந்த உடம்புக்கு வியாதி வந்துவிடும். அதனால்தான் **நன்றாக அயர்ந்து தூங்கும் பொழுது, நடுவில் யாரையும் எழுப்பக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. எக்காரணத்தை முன்னிட்டும் எவருடைய தூக்கத்திற்கும் இடையூறு செய்யக்கூடாது.** தூங்குவது உடலுக்கு வலிமை- உறுப்புகளுக்கு பலம். ஆனால் தேவைக்கு அதிகமாக தூங்குவது சோம்பேறித்தனத்திற்கும்-உடல் வியாதிக்கும் காரணமாக ஆகும். தற்காலத்தில் இரவு நடு நிசி பன்னிரண்டு மணி, ஒரு மணி வரை தூங்காமல் இருக்கும் பழக்கம் ஏற்பட்டு வருகிறது. ஆனால் பகலில் வெகுநேரம் கழித்துத் தூங்கி எழுந்திருக்கிறார்கள். எழுந்தபிறகு கூட எந்த வேலை செய்தாலும் தூக்கத்தினூடே செய்யும் படியாகிறது. ஆகவே ஒரு மனிதனுடைய தூக்கமென்பது இரவு நேரத்தில் அதிகமாக இருக்கவேண்டும். பகலில் தூங்குவது உடலுக்கு அவ்வளவு நல்ல தல்ல.

உண்ட களைப்பு தொண்டருக்கும் உண்டு என்றபடி உணவு உண்ட பிற்பாடு சிறிது ஓய்வு எடுக்கலாம். ஆனால், பெரும்

தூக்கமாகத் தூங்கக்கூடாது. ஒரு மனி தனுக்கு சராசரி எட்டு மணி நேரத்திற்கு மேல் தூக்கம் இருக்கக்கூடாது.

முன் காலத்திலெல்லாம் இரவில் எட்டு, ஒன்பது மணிக்கெல்லாம் படுத்துக் கொண்டு விடுவார்கள். காலை நான்கு, நாலரை மணிக்கெல்லாம் எழுந்தும் விடுவார்கள். அதனால் உடல் ஆரோக்கியமாக இருந்தது. தற்காலத்தில் பலர் கவலையையும், வியாதி களையும், வலிகளையும் மறந்து தூங்கு வதற்காக மாத்திரைகளை

ச் சாப்பிடுகிறார்கள். பிறகு அதுவே பழக்கமாகி அதிக மாத்திரைகள் சாப்பிட்டு இறந்தும் போகி றார்கள். இதெல்லாம் கூடாதென்றுதான் "அனந்தலாடேல்" என்றாள் ஒளவை.

## திருவெம்பாவை

தனி நூல் போல வழங்கும் திரு வெம் பாவை, எட்டாந் திருமுறையான திருவாச கத்தின் ஏழாம் பகுதி. திருவெம்பாவைப் பாடல்கள "எம்பாவாய்" என்று முடிவதால் இதனை திருவெம்பாவை என்பர். இதனை கி.பி 8ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த மாணிக்கவாசகர் திருவண்ணாமலையில் பாடினார். இதில் இருபது பாடல்கள் உள்ளன. இதன் உள்ளுறைப் பொருள் "சக்தியை வியந்தது".

திருவெம்பாவை உலகம் நலம் பெற மழை வளம் வேண்டுவதுடன், மகளிர் நலம் பெற நற்கணவனையும் பெறவேண்டுகிறது. மார்கழி நீராடலை மேற்கொள்ளும் கன்னிப் பெண்கள் பேச்சாகத் திருவெம்பாவை விளங்குகிறது. சங்க காலத்திய தைந் நீராடலும் அம்பாவாடலுமே பிற்காலத்தில் மார்கழி நீராடலாயின. மார்கழி நீராடல், பாவையர் நோன்பாய்ச் சமயச் சடங்காயிற்று. பாண்டிய நாட்டுச் சங்கப் புலவர்கள் "அம்பாவாடல்" என்று மக்கள் கொண்டா டியதை இலக்கிய வழக்கு ஆக்கினர். பின் அப்பகுதியில் வாழ்ந்த ஆண்டாளும் , மாணிக்கவாசகரும் அதனைத் தம் படைப்புத் திறனால் பாவை இலக்கியமாகப் படைத்தனர். பாண்டி நாட்டு மகளிர் விளையாட்டும் நோன்பும் நீராடலும் பாவை எனத் தனி இலக்கிய வகை பிறக்க வழி வகுத்தன.

ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது நிறைந்த கன்னிப்பெண்கள் அனைவரும் பாவை நோன்பு நோற்றற்குரியவர். திரு வெம்பாவையின் முற்பகுதியில், கன்னிப் பெண்கள் ஒருவரையொருவர் துயில் எழுப்பு கின்றனர்; சிவனடி மறவாச் சீரியோன் கணவனாக வேண்டிப் பாடுகின்றனர். பின் சிவபெருமான் பெருமையைப் பேசி நீராடு கின்றனர். மகளிர் நல்ல மழை பெய்யவேண்டு மெனப் பரவுகின்றனர். இறைவன், அடியார்க்கு அருளுந்திறம் உரைக்கின்றனர். அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும் பெருமை சொல்லிக் கன்னியர் நீராடுகின்றனர். சிவனடியாரே எங்கணவராகுக என்று அவர்கள் வேண்டினர். இறுதிப்பாட்டில் "இறைவன் தங்களைக் காத்தருள்க" என்று கன்னியர் போற்றுகின்றனர். திருவெம்பாவை, நோன்பு முறைகளை விவரிக்காது நீராட லையே பாடுகிறது.

பராசக்தி வழிவந்த பல சக்திகள் ஒருங்கு கூடித் தம்முள் ஒருவரை ஒருவர் எழுப்பிக் கொண்டு, இறைவன் புகழையும் பராசக்தியின் புகழையும் பாடிக்கொண்டு பொய்கைக்கு நீராடப் போனதாகத் திரு வெம்பாவைக்கு உட்பொருள் கூறுவர். ஆனால் "சக்தியை வியந்தது" என்பதில் ஒருமையே உள்ளது இங்கு நவசக்தியைக் குறிக்காது, பராசக்தியை வியந்து பாராட் டுதல் என்பதே உட்கருத்து.

ஆணவமலமாகிய இருளில் வீழ்ந்து உறங்கும் உயிர்களை அத்துயில் விட்டு எழுப்பிப் பிறவிப் பிணி நீங்க இறைவன் கருணை வெள்ளத்தில் ஆழ்ந்து இன்புற வருக என்பது மற்றோர் உட்பொருள். இது திருப்பெருந்துறைப் புராணம் கூறுவது. சிவஞான போதத்துக்கு ஊற்றுக்கண், திருவெம்பாவை.

இன்று தமிழகக் கோயில்களில் பாவைப் பாடல்களை, மார்கழித் திங்கள் முழுமையும் ஓதும் மரபுண்டு. இது பிற்காலச் சோழர் காலத்தில் ஏற்பட்ட வழக்கம். அதனால் திருவெம்பாவை கீழை நாடுகளுக்கும் பரவியது. திருவெம்பாவை, திருப்பாவை இரண்டும் தாய்லாந்தில் (சயாம்) மன்னர் முடிசூட்டு விழாவிலும் லே.சின்.சா என்ற திருவிழாவிலும் தமிழ் மந்திரமாக ஓதப்பெறுகிறது. திருவெம்பாவை, மார்கழி மாதம் மக்களால் பாடப்பெறுகிறது.

## திருப்பாவை

ஆண்டாள் என்ற கோதை நாய்ச்சியார் வைணவ ஆழ்வார்களுள் ஒருவர். இவர் பாடிய திருப்பாவை முப்பது பாடல்களை யுடையது. இவர் இதனைச் "சங்கத்தமிழ் மாலை" என்பர். இவர் கி.பி 8-ம் நூற்றாண்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்தவர். ஆண்டாள் தான் வாழ்ந்த ஸ்ரீவில்லிபுத்தூரை ஆயர் பாடியாக்கித் தன்னை இடைப் பெண்ணாக்கி வடபத்திரசாயி கோயிலை நந்தகோபன் மாளிகையாக்கிப் பெருமாளைக் கண்ணனாக்கி ஆயர்குலப் பேச்சும் மரபும் கைவரப் பெற்றுப் பாவை நோன்பு மேற்கொண்டு திருப்பாவை பாடுகின்றாள்.

திருப்பாவை உரையாசிரியர், பெரிய வாச்சான் பிள்ளை, "மார்கழி நோன்புக்கு வேதத்தில் ஆதாரமில்லை" என்பர். எனவே, உலக வழக்குத் தழுவியே ஆண்டாள் மார்கழி நோன்பை உள்ளடக்கித் திருப்பாவை பாடினாள். இதனைத் திருப்பாவையும் "மேலையார் செய்வனகள்" என்று உயர்ந்தோர் வழக்காகச் சுட்டுகிறது. தமிழர் பழக்கமே, பாவைப் பாட்டு உருவாவதற்கு அடித்தளமாகும்.

சங்க காலத்தில் தைந்நீராடல் என்றும் அம்பாவாடல் என்றும் பேசப்படுவனவற்றின் தொடர்ச்சி-வளர்ச்சி-பாவை நோன்பும் பாவைப்பாடலுமாம். மார்கழி முழுநிலவு அன்று தொடங்கும் தைத்திங்கள் முழுநிலவு அன்று முடியும். இது சந்திரனைக் கொண்டு மாதங்களைப் பகுத்த போது தைந்நீராடல் நீராடல் என்றும் சூரியனைக் கொண்டு மாதங்களை வரையறுத்தபோது இது மார்கழி நீராடல் என்றும் ஆயிற்று.

கன்னிப் பெண்கள் நெய், பால் உண்ணாமல் விடியற் காலை நீராடினர். கண்ணனை அடைவதே நோக்கமாகக் கொண்டு கண்ணுக்கு மை எழுதாதும், கூந்தலுக்குப் பூச்சூடாதும் கன்னியர் பாவைக்களம் புகுந்தனர். ஆலவட்டம், கண்ணாடி, சங்கு, பறை, கொடிகள், தீபங்கள் ஆகியனவும் நோன்புக்குத் தேவை. இவ்வாறு நோன்பு பற்றியவற்றைப் பெண்ணாகிய ஆண்டாள் விளக்கமாக உரைக்கிறார். திருவெம்பாவை நோன்பை விவரிக்காது நீராடலைச் சிறப்பித்துப் பேசுகிறது.

*திருப்பாவையின் முதல் ஐந்து பாசுரங்களில் மார்கழி நீராட மகளிரை அழைத்தல்,பாவை நோன்பு முறைகள்,பயன், மழை வேண்டி வாழ்த்தல் ஆகியன இடம் பெறுகின்றன. அடுத்த பகுதி, செல்வம், செயல் பண்புகளில் மகளிரைத் துயில் துயிலெழுப்பலும் "பறை தருதியாகில் மகிழ்வோம்" என்று கேட்டலும் அடங்கும்.பிறபகுதி அம்மகளிரை இறைவன் திருப்பணிக்குத் தகுதியுடையவராகச் செய்வது பற்றியது. இறுதிப்பாட்டுப் பயன் சொல்லி முடிகிறது.*

# விற்பனைக்குள்ள நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்வெழுத்துக் கலை | – நடன காசிநாதன் M.A. | 80. 00 |
| 2. | உரையாடல் தொடர்கிறது | – ரவிக்குமார் | 75. 00 |
| 3. | பண்டைய தமிழகம் | – கலாநிதி சி. க. சிற்றம்பலம் | 375. 00 |
| 4. | பெரிய புரானம் ஓர் ஆய்வு | – பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் | 420. 00 |
| 5. | திரு அருட்பா இசைமாலை | – (பதிப்பு) டாக். நா. மகாலிங்கம் | 75. 00 |
| 6. | புதுவைக் கல்லறையில் புதிய மலர்கள் | – முருகு சுந்தரம் | 30. 00 |
| 7. | தமிழியல் ஆய்வு வரலாறு | – ம. மதியழகன் | 100. 00 |
| 8. | நவீன இலக்கியச் சிந்தனைகள் | – ம. மதியழகன் | 87. 50 |
| 9. | பொருள் கோள் | – ச. அரங்கராசன் | 68. 75 |
| 10. | தமிழ் உணர்ச்சி தமிழ் வளர்ச்சி தமிழ் ஆட்சி | – முனைவர், பொன் கோதாண்டராமன் | 37. 50 |
| 11. | முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் | – தொ. மு. சி. ரகுநாதன் | 37. 50 |
| 12. | பயன் முறைத்தமிழ் | – டாக். சௌ. மதார்மைதீன் | 55. 00 |
| 13. | நல்லதோர் வீணை | – தி. முத்துகிருஷ்னன் | 50. 00 |
| 14. | இலக்கியமும் பண்பாடும் | – முனைவர். இ. சுந்தரமூர்த்தி | 40. 00 |
| 15. | வ. உ. சி. வாழ்க்கை வரலாறும் இலக்கியப் பணிகளும் | – அறிஞர். அ. சங்கரவள்ளி நாயகம் | 120. 00 |
| 16. | திருக்கரந்தை ஆதிவராகப் பெருமாள் வருக்கக் கோவை | – உரையாசிரியர் சி. ஜெகந்நாதாசார்யர் | 30. 00 |
| 17. | பொய் + அபத்தம் -> உண்மை | – ராஜ் கௌதமன் | 80. 00 |
| 18. | மானிட தரிசனங்கள் | – எஸ். அகஸ்தியர் | 105. 00 |
| 19. | புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம் | – முனைவர் இரா. சம்பத் | 150. 00 |
| 20. | இடுக்கி மாவட்டப் பழங்குடி மக்களின் வழக்காற்றியல் | – டாக். நசிம்தீன் | 112. 50 |
| 21. | கண்காணிப்பின் அரசியல் | – ரவிக்குமார் | 120. 00 |
| 22. | இதழாளர் பாரதி | – முனைவர் பா. இறையரசன் | 150. 00 |
| 23. | இந்திய அரசமைப்பு | – வே. தில்லைநாயகம் | 125. 00 |
| 24. | பூநகரி தொல்பொருளாய்வு | – ப. புஷ்பரட்ணம் M.A. | 450. 00 |
| 25. | புதுக்கவிதையில் சமுதாயம் | – டாக். வீ. உண்ணாமலை | 150. 00 |
| 26. | வேளாண்மைப் பல்கலைக்கழகம் | – சோமலெ லெ. சோமசுந்தரம் | 62. 50 |
| 27. | வ. சுப. மாணிக்கனாரின் வாழ்வும் பணியும் | – பதிப்பாசிரியர் டாக். ச. மெய்யப்பன் | 17. 00 |
| 28. | இந்த நூற்றாண்டுச் சிறுகதைகள் | – தொகுப்பு :- விட்டல் ராவ் | 150. 00 |

**இவற்றுடன் ஆன்மீக, தமிழ்த்துறை சார்ந்த நூல்கள், திணைக்கள வெளியீடுகள் என்பன திணைக்கள விற்பனை நிலையத்தில் விற்பனைக்குள்ளன. காரியாலய நாட்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.**

*Printed at Spartan Graphics (Pvt) Ltd. 154, Wolfendhal Street, Colombo 13. Tel : 323638 328017*

# O. S. S

To :

47 The Library,
Tamil Sangam,
Rudra Mawatha,
Wellawatte,
COLOMBO 6.

From :

The Director,
**Department of Hindu Religious & Cultural Affairs**
98, Ward Place,
Colombo - 7.